பக்கங்கள்: 10 விலை : 20/-

# காலைக்கதிர்
Kālaikkathir
மாலைப்பதிப்பு

சாயல் 01 | வள்ளுவர் ஆண்டு 2051 | பங்குனி 19 புதன்கிழமை 01.04.2020 | கதிர் 15

# பிரதேச சபைகளின் நிவாரணப் பணிக்கு ஆளுநர் இடைஞ்சல்

## அனுமதி தராமல் இழுத்தடிப்பு

யாழ்ப்பாணம், ஏப். 01

ஊரடங்கு பிறப்பிக்கப்பட்டு பன்னிரண்டு நாள்களாகி விட்டன. வீடுகளுக்குள் முடங்கிக் கிடக்கும் வடபகுதி பொதுமக்களுக்கான அரச நிவாரணம் எதுவும் அவர்களுக்குக் கிட்டவேயில்லை. இந்த நிலைமையில் வடக்கு மாகாணத்தில் உள்ள பிரதேச சபைகள் தமது சொந்த ஒதுக்கீட்டில் தத்தமது பிரதேச மக்களுக்கு விரைந்து நிவாரணப் பணிகளை முன்னெடுக்க எடுத்த முயற்சிகளும் வடக்கு ஆளுநர் தரப்பின் மெத்தனப் போக்காலும் முட்டுக் கட்டையாலும் முடங்கிப் போய் விட்டன என சம்பந்தப்பட்ட தரப்புகள் கடும் விசனம் தெரிவித்துள்ளன.

7

## யாழில் 2 ஆவது கொரோனா நோயாளி

யாழ்ப்பாணத்தில் மற்றொருவருக்கு கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது என்று சுகாதார அமைச்சு அறிவித்துள்ளது.

பலாலி தனிமைப்படுத்தல் நிலையத்தில் தங்க வைக்கப்பட்டுள்ள மத

2

## யாழில் இன்று பரிசோதித்த ஆறு பேருக்கும் தொற்றுஇல்லை

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் இன்று (புதன்கிழமை) பரிசோதனை மேற்கொள்ளப்பட்ட 6 பேருக்கும் கொரோனா தொற்று

2

## ஊரடங்குச் சட்டம் இனி 6 ஆம் திகதியே நீக்கம்

கொழும்பு, ஏப். 01

கொழும்பு, கம்பஹா, களுத்துறை, புத்தளம், கண்டி மற்றும் யாழ்ப்பாண மாவட்டங்களைத் தவிர்ந்த ஏனைய மாவட்டங்களில் இன்று காலை 6 மணிக்கு நீக்கப்பட்ட பொலிஸ் ஊரடங்குச் சட்டம் மீண்டும் பிற்பகல் 2 மணிக்கு நடைமுறைப் படுத்தப்பட்டது.

2

## நோயாளர்கள் எண்ணிக்கை அதிகரிக்கும்!

கொழும்பு, ஏப். 01

அடுத்த இரண்டு வாரங்களில் கொரோனா நோயாளர்களின் எண்ணிக்கை நூற்றுக் கணக்கில் அதிகரிக்கலாம் என எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

2

## அக்குரண முற்றாக முடக்கம்!

கொழும்பு, ஏப். 01

அக்குரண பிரதேச செயலர் பிரிவின் அனைத்து கிராம சேவகர் பிரிவுகளும் முடக்கப்பட்டுள்ளன.

மத்திய மாகாணத்தின் முதலாவது கொரோனா நோயாளி சில தினங்களின் முன்னர் அக்குரண, தெலம்புகஹவட்ட பகுதியில் கண்டறியப்பட்டார்.

2

## கட்சித் தலைவர்களை இன்று சந்திக்கின்றார் கோட்டாபய



கொழும்பு, ஏப். 01

கொரோனா தொற்று நடவடிக்கைகள் தொடர்பாக ஆராய்வதற்காக கட்சித் தலைவர்களைச் சந்திக்கவுள்ளார் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ.

இன்று ஜனாதிபதி செயலகத்தில் இந்தச் சந்திப்பு நடக்கவுள்ளது.

2

## சர்வதேச நிதி நிறுவனங்களிடம் உதவி கோருகிறார் கோட்டாபய

கொழும்பு, ஏப். 01

சுற்றுலாத்துறை, ஏற்றுமதி, வெளிநாடுகளில் தொழில் செய்கின்றவர்களிடமிருந்து கிடைக்கும் வருமானம் மற்றும் கடன், பங்குச் சந்தையில்

2

## சமுர்த்திப் பயனாளிகள் படுமோசமான பாதிப்பு!



சிவமோகன் சீற்றம்

வவுனியா, ஏப். 01

சமுர்த்திப் பயனாளிகள் படுமோசமான பாதிப்புக்கு உள்ளாகியுள்ளனர் எனத் தெரிவித்துள்ள முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்

2

## சட்டவிரோத மது வியாபாரம்; மூடப்பட்டது கனகபுரம் விடுதி



கிளிநொச்சி,ஏப்.01

கிளிநொச்சி கனகபுரம் தனியார் விடுதி ஒன்று சீல் வைக்கப்பட்டுள்ளது.

சட்டவிரோதமான முறையில் மதுபான விற்பனையில் ஈடுபட்டார்கள் என்ற குற்றச்சாட்டின் பேரிலேயே இன்று புதன்கிழமை இவ்வாறு அது சீல் வைக்கப்பட்டுள்ளது.

2

## மன்னார் நகரசபை உறுப்பினர்களின் I மாதக் கொடுப்பனவு நிவாரணத்துக்கு

மன்னார் நகர சபை உறுப்பினர்களின் ஒரு மாதக்கொடுப்பனவு மக்களின் அத்தியாவசிய உலர் உணவுதேவைக்காகஒதுக்கீடுசெய்யப்பட்டுள்ளது.

2

## வெள்ளவத்தையில் வயோதிபத் தம்பதி கொரோனா தொற்றுடன் கண்டுபிடிப்பு


'சீல்' வைக்கப்பட்டது அவர்களின் வீடு
45 பேருடன் தொடர்பில் இருந்தமை அம்பலம்

கொழும்பு, ஏப். 01

தலைநகர் கொழும்பில் தமிழ் மக்கள் அதிகம் செறிந்து வாழும் வெள்ளவத்தைப் பகுதியில் கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளான வயோதிபத் தம்பதியினர் நேற்றுக் கண்டு பிடிக்கப்பட்டுள்ளனர். இதையடுத்து அவர்கள் தங்கியிருந்த வீடு 'சீல்' வைக்கப்பட்டுள்ளது.

2

## கொரோனாவால் பலியானோருக்கு நல்லூர்ப் பிரதேச சபையில் அஞ்சலி



யாழ்ப்பாணம், ஏப். 01

கொரோனா கிமித் தொற்று காரணமாக உயிரிழந்த மக்களுக்கு நல்லூர்ப் பிரதேச சபை அமர்வில் அஞ்சலி செலுத்தப்பட்டது.

கொரோனா வைரஸ் அச்சுறுத்தல் காரணமாக பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவி செய்வதற்காக நல்லூர் பிரதேச

2

காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு



## வெள்ளவத்தையில் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

84 வயதுடைய குறித்த தம்பதியினர் தொற்று உறுதிப்படுத்துவதற்கு முன் கொழும்பில் 3 வைத்தியசாலைகளில் சிகிச்சை பெற்றுள்ளமை தெரிய வந்துள்ளது எனக் கொழும்பு மாநகர சபையின் வைத்திய அதிகாரி ருவான் விஜயமுனி தெரிவித்தார்.

அவர்களின் கொரோனா தொற்று அறிகுறிகளை அடையாளம் காணாது அந்தத் தம்பதியினரின் இரு வைத்தியர்களான பேரப்பிள்ளைகளே அவர்களை வைத்தியசாலைகளில் சேர்த்துள்ளனர் எனவும் அவர் சுட்டிக்காட்டினார்.

இந்நிலையில் இரு வைத்தியர்களான பேரப்பிள்ளைகளுக்கும் கொரோனாத் தொற்று ஏற்பட்டிருக்கலாம் என்ற சந்தேகத்தில் தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர்.

இதனிடையே வைத்தியர்களான பேரப்பிள்ளைகளினால் உண்மைத் தன்மை மறைக்கப்பட்டு குறித்த வயோதிபத் தம்பதியினர் வைத்தியசாலைகளில் சேர்க்கப்பட்டனரா எனவும் விசாரணைமேற்கொள்ளப்பட்டுவருகின்றது என்று கொழும்பு மாநகர சபையின் வைத்திய அதிகாரி குறிப்பிட்டார்.

எவ்வாறாயினும் அந்தத் தம்பதியினர் சிகிச்சை பெற்ற அனைத்து வைத்தியசாலைகளிலும் அவர்களைக் கவனித்த பணிக் குழுவினர்கள், வைத்தியர்கள் ஆகியோர் தற்போது தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர் எனவும் அவர் கூறினார்.

இதேவேளை, குறித்த தம்பதியினர் வெள்ளவத்தைப் பிரதேசத்தில் 45 பேருடன் நெருங்கிய தொடர்பில் இருந்துள்ள நிலையில் அவர்கள் அனைவரும் தற்போது தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர்.

இந்தத் தம்பதியினரின் இரு மகன்கள் அண்மையில் இந்தியாவுக்கு விஜயம் செய்து கடந்த 14ஆம் திகதி நாடு திரும்பியுள்ளனர் என்று விசாரணைகளின்போது தெரியவந்துள்ளது. ஆனால், அவர்களுக்குக் கொரோனா வைரஸ் தொற்றிருப்பது இதுவரை உறுதியாகவில்லை. எனினும், அவர்கள் இருவரும் தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர் எனவும் கொழும்பு மாநகர சபையின் வைத்திய அதிகாரி மேலும் தெரிவித்தார்.

## கொரோனாவால் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சபையின்சிறப்பு அமர்வு இன்று கூடியது.

நல்லூர் பிரதேச சபையின் தவிசாளர் தியாக மூர்த்தி தலைமையில் சபை மண்டபத்தில் இன்று கூட்டம் நடைபெற்றது.

இந்த அமர்வின் ஆரம்பத்தில் சபையின் தவிசாளரின் அறிவுறுத்தலுக்கு அமைய வைரஸ் தாக்கம் காரணமாக உயிரிழந்தவர்களுக்கு 2 நிமிட அக வணக்கம் செலுத்தப்பட்டது.

வைரஸ் தாக்கத்திலிருந்து பாதுகாத்து கொள்ளும் வகையில் இந்த கூட்டத்தில் பங்கேற்ற உறுப்பினர்கள் சமூக இடைவெளி வழிகளைப் பின்பற்றி அமர்ந்திருந்தனர்.

## அக்குரண முற்றாக ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அவரது உறவினர்களும் தொற்றினால்பாதிக்கப்பட்டமைகண்டறியப்பட்டதையடுத்து, இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

அக்குரண பிரதேச செயலர் இந்திக குமாரி அபேசிங்க இதனை அறிவித்தார். அனைத்து கிராமசேவகர் பிரிவுகளும் முடக்கப்பட்டுள்ளன எனவும், வீதிகளை யாரும் பயன்படுத்த முடியாது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கொரோனாவினால் கண்டறியப்பட்டவரின் மனைவி உள்ளிட்ட நெருங்கிய உறவினர்கள் மூவருக்கு தொற்று ஏற்பட்டிருந்ததமை நேற்றுக் கண்டறியப்பட்டது.

## நோயாளர்கள் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வைத்திய பரிசோதனைச் சபையின் பணிப்பாளர் வைத்தியர் ஜெயருவான் பண்டார இந்த எச்சரிக்கையை விடுத்துள்ளார்.

இது குறித்து கருத்து வெளியிட்டுள்ள அவர், ஆரம்பத்தில் ஒருவர், இருவர் என்ற வகையில் நாட்டில் கொரோனா தொற்றாளர்கள் கண்டறியப்பட்டனர்.

முதலில் இது ஒருவரிடம் இருந்து ஒருவருக்கு பரவும் விதமாகவே கண்டறியப்பட்டது. தனி நபர்களைக் கண்டறிந்து நிலைமைகளை கட்டுப்படுத்த எமக்கு இலகுவாக இருந்தது.

கொழும்பு, புத்தளம் ஆகிய பகுதிகளில் அவர்கள் வசித்ததாக கூறப்பட்ட நிலையில் ஒரு சில நாள்களின் பின்னர் அப்பகுதிகளில் கொரோனா தொற்றாளர்களின் எண்ணிக்கை வேகமாக அதிகரித்தது.

அதேபோல் இப்போது நாட்டில் வெவ்வேறு பகுதிகளில் ஒருவர் இருவர் என்ற அடிப்படையில் கொரோனா தொற்றாளர்கள் அடையாளம் காணப்படுகின்றனர். இந்த எண்ணிக்கை வெகு விரைவாக அதிகரிக்கக்கூடிய வாய்ப்புகள் உள்ளது.

உலக நாடுகளில் ஆரம்பத்தில் அதாவது கொரோனா தொற்றாளர்கள் குறித்து முதல் வாரங்களில் மிகவும் மெதுவான உயர்வுநிலை காணப்பட்ட போதிலும் பின்னர் மிக வேகமாக அந்த நாடுகளில் கொரோனா தொற்றாளர்களின் எண்ணிக்கையும் மரண வீதமும் அதிகரித்தது.

உலக சுகாதார மையத்தின் கொரோனா வரைபட நிரலை பார்க்கையில் இன்று மிகவும் உயரிய தாக்கத்தை அது காட்டுகின்றது. அதேபோன்று இலங்கையிலும் அவ்வாறான அச்சுறுத்தல் உள்ளது.

முதல் சில வாரங்களில் மிகவும் மெதுவாக கொரோனா தொற்றாளர்கள் கண்டறியப்பட்டாலும் கூட அடுத்த ஒரு இரு வாரங்களில் மிக வேகமாகப் பரவக்கூடிய நிலைமை இருப்பதாக நாம் கருதுகின்றோம்.

இது சாதாரண விடயமாக கருத முடியாது. இது நாட்டுக்கு மிகவும் அச்சுறுத்தலான விடயமாகும். இதற்கான காரணம் எமது சமூகத்தில் கலந்துள்ள கொரோனா தொற்றாளர்கள் இன்று கொரோனா வைரஸை சமூகத்தில் பரப்ப ஆரம்பித்துள்ளனர்.

ஆகவேதான் அடுத்த இரு வாரங்கள் மிகவும் அச்சுறுத்தலான காலமாக நாம் கருதுகின்றோம். ஒரே நேரத்தில் நூற்றுக்கணக்கான கொரோனா தொற்றாளர்கள் கண்டறியப்பட அதிக வாய்ப்புக்கள் உள்ளன. - என்றார்.

## ஊரடங்குச் சட்டம் ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இவ்வாறு மீள அமுல்படுத்தப்படும் பொலிஸ் ஊரடங்குச் சட்டம் ஏப்ரல் மாதம் 6 ஆம் திகதி காலை 6 மணி வரை நீடிக்கும் என ஜனாதிபதி ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

அத்துடன் கொழும்பு, கம்பஹா, களுத்துறை, புத்தளம், கண்டி மற்றும் யாழ்ப்பாண மாவட்டங்களில் மறு அறிவித்தல் வரை பொலிஸ் ஊரடங்குச் சட்டம் அமுலில் இருக்கும் எனவும் ஜனாதிபதி ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

## சட்டவிரோத மது ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இந்தத் தனியார் விடுதியில் இருந்த மூவரிடம் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன எனத் தெரிவிக்கப்பட்டது.

அத்துடன், இந்தத் தனியார் விடுதியின் உரிமையாளருக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்யப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

## சமுர்த்திப் பயனாளிகள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வைத்திய கலாநிதி சிவமோகன், சமுர்த்திக் கடன் வழங்கலில் அரசு சொன்னதைச் செய்ய வேண்டும் எனக் கோரிக்கை விடுத்துள்ளார்.

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஊடகங்களுக்கு இன்று அனுப்பி வைத்துள்ள அறிக்கையிலேயே அவர் இந்த விடயத்தைக் குறிப்பிட்டுள்ளார்.

அவர் மேலும் கூறுகையில் –

அரசு அனைத்து சமுர்த்திக் குடும்பங்களுக்கும் பத்தாயிரம் ரூபா கடன் வழங்குவதாக பகிரங்க அறிவித்தல் விடுத்தது. இறுதியில் அதற்கான எழுத்து மூலமான அறிவித்தல்கள் வழங்கப்படும்போது முதற்கட்டம் ஐயாயிரம் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு தெரிவித்திருந்தது.

மேலும், அவர்களது கடன், சமுர்த்திப் பயனாளர்களின் சேமிப்பில் பணம் இருந்தால் மட்டுமே வழங்குமாறு அறிவுறுத்தல் வழங்கப்பட்டிருந்தது. இந்நிலையில்ஐயாயிரத்துக்கும்குறைவாக சேமிப்பில் பணம் இருப்பவர்களுக்கு சேமிப்பில் இருக்கும் பணத்தில் எண்பது (80%) வீதம் மட்டுமே வழங்குமாறும் அறிவுறுத்தல் வழங்கப்பட்டிருந்தது. இதனால் படுமோசமாக சமுர்த்திப் பயனாளிகள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள்.

மேலும் 2009ஆம் ஆண்டு யுத்தம் முடிவின் பின் சமுர்த்தியில் உள்வாங்கப்படாத பல்லாயிரக்கணக்கான குடும்பங்கள் கடந்த ஆட்சியாளர்களின் இறுதிக் காலத்தில் உள்வாங்கப்பட்டிருந்தார்கள். அவர்களுக்கான இந்தக் கடன் நிதி ஒரு தடவை கூட வழங்கப்படவில்லை. அதனால் அவர்கள் விரக்தியடைந்துள்ளார்கள்.

இந்த சமுர்த்திக் கடன் வழங்கும் நடவடிக்கையை ஐக்கிய தேசியக் கட்சி ஆட்சிக் காலத்தில் வழங்கப்பட்டவர்களை அரசியல் ரீதியில் பழிவாங்க முயற்சிக்கிறதா இந்த அரசு என பொது மக்கள் கேள்வி கேட்கிறார்கள்.

எனவே அரசாங்கம் ஒரு தீர்மானத்தை எடுத்து அறிவிப்பதாக இருந்தால் உருப்படியாக எதுவும் செய்ய முடியுமா என்று தீர்மானித்து விட்டு அறிவித்தல்களை வழங்கவேண்டும். வெறுமனே அறிவித்தல்களை வழங்கிவிட்டு மக்களை ஏமாற்றும் செயற்பாடுகளில் ஈடுபடுவதை ஏற்றுக்கொள்ள முடியாது - என்றார்.

## மன்னார் நகரசபை ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மன்னார் நகர சபையின் 25 ஆவது அமர்வு நேற்றுப் புதன்கிழமை முற்பகல் 10.30 மணியளவில் நகரசபையின் தலைவர் ஞானப்பிரகாசம் அன்ரனி டேவிட்சன் தலைமையில் இடம்பெற்றது.

இதன்போது மன்னார் நகர சபையின் தலைவர், உப தலைவர், உறுப்பினர்கள் இணைந்து தங்களுக்கான ஒரு மாத கொடுப்பனவை மக்களுக்கான அத்தியாவசிய உலர் உணவு தேவைகளுக்காக வழங்குவதாகத் தீர்மானம் மேற்கொண்டனர்.

## யாழில் 2 ஆவது' ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நோயாளி போதகர் ஒருவருக்கே இவ்வாறு கொரோனா வைரஸ் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

இலங்கையில் கொரோனா வைரஸ் தொற்றால் மேலும் 03 பேர் இன்று புதன்கிழமை அடையாளம் காணப்பட்டுள்ளனர் என்று சுகாதார மேம்பாட்டுத் திணைக்களத்தின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனடிப்படையில் இலங்கையில் கொரோனா வைரஸ் தொற்றால் பாதிக்கப்பட்டோரின் எண்ணிக்கை 146 ஆக அதிகரித்துள்ளது.

அவர்களில் 17 பேர் முழுமையாகச் சுகமடைந்து வீடு திரும்பியுள்ளனர். இருவர் உயிரிழந்துள்ளனர்.

## புலமைப் பரிசில் பரீட்சையை ஒத்திவைக்கும் முடிவு இல்லை

கொரோனா வைரஸ் காரணமாக ஐந்தாம்தர புலமை பரிசில் பரீட்சையை ஒத்திவைப்பதற்கு எந்தவித தீர்மானமும் மேற்கொள்ளப்படவில்லை எனக் கல்வி அமைச்சர் டளஸ் அழகப்பெரும தெரிவித்தார்.

அரசாங்கத் தகவல் திணைக்களத்தில் இன்றைய தினம் இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் வைத்தே அமைச்சர் இதனை கூறினார். இதே வேளை இந்த செய்தியாளர் செய்தியாளர் சந்திப்பில் இணைந்துக் கொண்ட அமைச்சரவையின் இணை பேச்சாளர் பந்துல குணவர்தன மீண்டும் பாடசாலைகள் திறக்கப்படும் போது பல்கலைக்கழக விண்ணப்பங்களுக்காக மாணவர்களுக்கு இரண்டு வாரங்கள் கால அவகாசம் பெற்றுக் கொடுக்கப்படும் எனவும் குறிப்பிட்டார்.

இதேவேளை கல்வி பொது தாராதர பத்திர சாதாரண தர பரீட்சை பெறுபேறுகள் எதிர்வரும் ஏப்ரல் மாதம் 30 திகதிக்கு முன்னர் வெளியிடப்படும். அப்பரீட்சையின் விடைத்தாள்களைத் திருத்தும் பணிகள் நிறைவடைந்துள்ளன எனவும் கல்வி அமைச்சர் டளஸ் அழகப்பெரும தெரிவித்தார்.

## சர்வதேச நிதி ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வெளிநாட்டு முதலீடுகளில் தங்கியுள்ள பொருளாதாரங்களைக் கொண்டுள்ள இலங்கை போன்ற இடர் நிலைக்கு உள்ளாகியுள்ள அபிவிருத்திய டைந்து வரும் நாடுகளுக்கு உதவுமாறு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ சர்வதேச நிதி நிறுவனங்களிடம் கேட்டுக்கொண்டுள்ளார்.

ஜனாதிபதியின் ஊடகப்பிரிவினால் வெளியிடப்பட்டுள்ள அறிக்கையிலேயே இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

உலக சுகாதார நிறுவனத்தின் பணிப்பாளர் நாயகத்துடன் தொலைபேசியில் உரையாடிய ஜனாதிபதி, கடன் தவணை உரிமையைப்பெற்றுக்கொள்வதற்கு சர்வதேச நாணய நிதியத்தின் முகாமைத்துவப் பணிப்பாளர், உலக வங்கியின் தலைவர், ஆசிய அபிவிருத்தி வங்கியின் தலைவர் மற்றும் இரு தரப்பு கடன் வழங்கும் முன்னணி நாடுகளின் தலைவர்களின் இணக்கத்தை பெற்றுக்கொள்ளுமாறு குறிப்பிட்டார்.

## கட்சித் தலைவர்களை ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கொரோனா தொற்றைக் கட்டுப்படுத்த அரசு மேற்கொள்ளும் நடவடிக்கைகள், நிவாரண நடவடிக்கைகள் குறித்து கட்சித் தலைவர்களுக்கு ஜனாதிபதி கோட்டாபய விளக்கமளிக்கவுள்ளார்.

## யாழில் இன்று .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இல்லையென உறுதிப்படுத்தப்பட்டுள்ளதாக வைத்தியசாலை பணிப்பாளர் சத்தியமூர்த்தி தகவல் வெளியிட்டுள்ளார்.

இதேவேளை, யாழ் போதனா வைத்தியசாலையில், தற்போதுவரை கொரோனா பரிசோதனை மேற்கொண்டு 39 பேர் வெளியேறியுள்ளனர்.

சந்தேகத்தின் பேரில் 10 பேர் இன்று அனுமதிக்கப்பட்டிருந்தனர். அவர்களில் அறுவரின் பரிசோதனை அறிக்கைகளே இன்று கிடைத்தன. மிகுதி நால்வரின் அறிக்கைகள் நாளை கிடைக்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

# நமது பார்வை

உண்மை – நேர்மை – பக்கம் சாராமை
ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி – 021 222 3000,
மின்னஞ்சல் – kalaikkathirnews@gmail.com
இணையம் – https://kalaikathir.online

## புதிய உலக ஒழுங்கு ஒன்று இனிமேல் இங்கு கட்டவிழுமா?

இரண்டாம் உலக மகா யுத்தத்தின் பின்னர் உலகம் எதிர்கொள்ளும் மிகமோசமான பூகோள நெருக்கடி என்று கொரோனாத் தொற்றை விமர்சித்திருக்கின்றார் ஐக்கிய நாடுகள் பொதுச் சபையின் செயலாளர் நாயகம் அட்டனியோ குட்ரஸ்.

இரண்டாவது உலக மகா யுத்தத்தின் கொடூரப் பேரழிவின் புதைகுழியிலிருந்து தோற்றம் பெற்ற ஐக்கிய நாடுகள் சபை, இப்போதைய நிலைவரத்தை இப்படித்தான் மதிப்பீடு செய்கின்றது.

"இந்த தொற்று நோய் இந்தப் பூமிப் பந்தின் ஒவ்வொரு மனிதனுக்கும் அச்சுறுத்தலாகியிருக்கின்றது. மனித வரலாற்றில் அண்மைக் காலத்தில் முன்னெப்போதும் இல்லாதவாறு மிக மிக மோசமான பொருளாதாரப் பின்னடைவை இந்த நோய்த் தொற்றுப் பரம்பல் ஏற்படுத்தியிருக்கின்றது" என்று ஐ.நா.பொதுச் செயலாளர் கூறுவது முற்றிலும் உண்மை.

இந்தக் கொரோனா வைரஸ் இப்போது உலகில் 'சத்தமின்றி, இரத்தமின்றி, யுத்தமொன்றாக' வந்திருக்கின்றதா என்பதுதான் இப்போது பலரும் எழுப்பும் கேள்வி.

*"இந்த நெருக்கடி இரண்டு விதமான ஆபத்து அலைகளைக் கொண்டிருக்கின்றது. ஒன்று – உலக நாடுகளிடையே ஸ்திரத்தன்மையைப் பாதித்து, குழப்பத்தைத் தீவிரப்படுத்தியிருக்கின்றது. அடுத்து – தரப்புகளிடையேயான பிணக்கைத் தீவிரப்படுத்தியிருக்கின்றது. இந்த வகையில் நோக்கும்போது இரண்டாம் உலகப் போருக்குப் பின்னரான மிக மோசமான நெருக்கடிக் கட்டமாக இதைக் கருதுகிறோம்."* – என்று செயலாளர் நாயகம் குறிப்பிடும் விடயத்தில் வரிகளுக்கு இடையில் எழுத்தில் வராத ஒரு செய்தி உள்ளது.

அது என்ன? துப்பாக்கிகள் சுடாமல், பீரங்கிகள் முழங்காமல், குண்டுகள் வெடிக்காமல் மூன்றாவது உலக மகா யுத்தம் கட்டவிழ்கின்றதா என்பதுதான் ஐ.நா. பொதுச் செயலாளரின் செய்திக்குள் புதைந்து கிடந்து கிளம்புகின்ற சந்தேகம்.

பேராயுதங்கள் முழங்கி, அணுகுண்டுகள் வெடித்து, பிரகடனப்படுத்தப்பட்ட யுத்தம் ஒன்று கட்டவிழ்ந்துதான் மூன்றாம் உலகப் போர் முகிழவேண்டும் என்பதல்ல.

வெறும் அணுகுண்டுகளை வைத்திருக்கும் வல்லரசுகள் மட்டுமே ஆதிக்க சக்திகள் என்ற உலக ஒழுங்கைத் தகர்த்தெறிந்து, புதிய உலக ஒழுங்குக்குரிய செல்நெறிக்கான பாதையை வகுக்கும் தந்திரோபாயத் திட்டம் கட்டவிழ்கின்றதோ என்று பலரும் சந்தேகிக்கின்றனர்.

வல்லரசு நாடுகளையே கதிகலங்க வைக்கும் நுண்ணுயிர் ஆயுதமாக வெளிப்பட்டிருக்கின்றது கொரோனா வைரஸ்.

இந்த வைரஸைக் கண்டு ஒடி ஒளிய வேண்டிய கட்டத்தில் உலகம் இன்று இருக்கின்றது.

வலிமையான குண்டுகள் பௌதீகப் பேரழிவுகள் மூலம் ஏற்படுத்தக் கூடிய பின்னடைவை சத்தம், சந்தடியின்றி ஒரு நுண்ணுயிர் ஏற்படுத்தி நிற்கின்றது.

அணுகுண்டு போன்ற வல்லாயுதங்கள் கூட தம்மை நெருங்க முடியாது என்று வான், தரை, கடல் கவசங்களை எஃகு போல ஏற்படுத்தி, அந்தப் பாதுகாப்பின் வலிமையால் கிட்டிய மிதப்பில் திமிரெடுத்து நின்ற அமெரிக்கா போன்ற நாடுகளையே கதிகலங்க வைத்து விட்டது இந்தக் கண்ணுக்குத் தெரியாத நுண்ணுயிரி.

இவ்வளவு காலமும் – இரண்டாம் உலக மகா யுத்தத்துக்குப் பின்னர் – உலகப் பொலிஸ்காரன் அமெரிக்கா. 'வல்லான் வகுத்ததே சட்டம்' என்பது போல அமெரிக்கா விதித்ததே உலக ஒழுங்கு முறை அல்லது நியதி என்றாகியிருந்தது.

ஆனால், இன்று நிலைமை தடுமாறுகின்றது.

கொரோனா போன்ற நுண்ணுயிரிக்குத் தடுப்பரண் – கவசம் – வைத்திருப்பவனே பலசாலி என்று உலகம் கருதக் கூடிய நிலைமை உள்ளது.

அந்த அற்ப நுண்ணுயிரியைச் சமாளிக்க முடியாமல் தடுமாறுபவன் – உலகில் ஆயுத வலிமை ரீதியில் எத்துணை பலமிக்கவனாக இருந்தாலும் – பலனற்றவனே என்று உலகம் கருதும் நிலைமை வந்துள்ளது.

சுருங்கச் சொல்வதானால், அணுகுண்டையும், வலிமை மிக்க போராயுதங்களையும் பலமாக வைத்துக் கொண்டு உலகை அச்சுறுத்தித் தம் வழி நடத்திய அமெரிக்காவின் போக்கு மலையேறும் காலம் வந்து விட்டது போலத் தோற்றுகின்றது.

உயிரியல் ஆயுதம் எனக் கருதத்தக்க கொரோனா போன்ற நுண்ணுயிர் வைரஸ்கள், கிருமிகளைக் கட்டியாளுபவனும், அதைக் கட்டுப்பாட்டில் வைத்திருக்கக் கூடிய தந்திரத்தை அறிந்தவனும்தான் இனி உலகப் பொலிஸ்காரனாக மாற முடியும் என்ற புதிய உலக ஒழுங்கை நோக்கி உலகம் நகர்கின்றதா என்ற கேள்வி எழுகின்றது.

அடுத்து வரும் வாரங்கள் இந்தக் கேள்விக்குப் பதில் தரக் கூடும்.

# நோய் எதிர்ப்பு சக்தியை அதிகரிக்கும் ஆயுர்வேத மருந்துகளை சந்தைக்கு!

வைரஸ் தொற்றிலிருந்து நம்மை பாதுகாத்துக்கொள்ள ஆயுர்வேத மருந்துகளை சந்தைக்கு அறிமுகப்படுத்துவதற்கு எதிர்பார்த்துள்ளதாக ஆயுர்வேத மருத்துவ சபை தெரிவித்துள்ளது.

வைரஸ் தொற்றிலிருந்து பாதுகாப்பு தருவதும் விங்களை முறியடிக்கும் ஆற்றல் கொண்டதுமான ஆயுர்வேத மருந்துகளை சந்தைக்கு அறிமுகப்படுத்துவதற்கு எதிர்பார்த்துள்ளதாக ஆயுர்வேத மருத்துவ சபை தெரிவித்துள்ளது.

நோய் எதிர்ப்பு சக்திகளை அதிகரிக்கவும் கொவிட் 19 போன்ற வைரஸ் தொற்றிடமிருந்து பாதுகாப்பு பெறுவதற்குமான ஆயுர்வேத பானம் ஒன்று தயாரிக்கப்பட்டுள்ளதாக ஆயுர்வேத மருத்துவ சபையின் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

# கிடாச்சூரி கண்ணகை ஆலய திருப்பணிசபையால் அத்தியாவசிய உணவுப் பொருள்கள் விநியோகம்



வவுனியா, ஏப். 01

ஊரடங்குச் சட்டம் அமுலில் இருப்பதால் தொழிலுக்குச் செல்ல முடியாது கஷ்டப்படும் மக்களுக்காக அத்தியாவசிய உணவுப் பொருள்களை அவர்களின் விடுகளுக்குச் சென்று வவுனியா கிடாச்சூரி கண்ணகை முத்துமாரி அம்மன் ஆலய திருப்பணிச் சபையினர் வழங்கினர்.

மறவன்குளம், ஈஸ்வரிபுரம், தரணிக்குளம், பூம்புகார், கல்மடு, சாளம்பன், முல்லைக்குளம், கோதண்டர், நொச்சிக்குளம், சுந்தர புரம், புதுக்குளம், அம்மிவைத்தான் ஆகிய கிராமங்களைச் சேர்ந்த – அன்றாடம் தொழில் செய்து வாழும் – மக்கள் கொரோனா வைரஸ் காரணமாக ஊரடங்குச் சட்டம் நடைமுறையில் இருப்பதால் தமது அன்றாட உணவுத் தேவையை நிர்த்தி செய்வதில் பெரும் சிரமங் களை எதிர் கொண்டிருந்தனர்.

இவர்களுக்கு வவுனியா கிடாச்சூரி கண்ணகை முத்துமாரி அம்மன் ஆலய திருப்பணிச் சபையினரால் அத்தியாவசிய பொருள்கள் அடங்கிய பொதிகள் வழங்கப்பட்டன.

# பிபிஸி புகழ் அழகையாவுக்கு வைரஸ் தொற்று



ஈழத் தமிழரான பிபிஸி புகழ் ஜோர்ஜ் அழகையாவுக்கு கொரோனா வைரஸ் தொற்று இருப்பது சற்று முன்னர் உறுதிசெய்யப்பட்டுள்ளது. இவருக்கு ஏற்கனவே புற்று நோய் இருக்கிறது. இதன் காரணத்தால் அவர் பிபிஸி செய்தி வாசிப்பு பிரிவில் இருந்து விலகி இருந்தார். அழகையா அடிக்கடி மருத்துவமனை சென்று வந்த காரணத்தால்தான் இவருக்கு கொரோனா தொற்றி இருக்கக்கூடும் என்று கூறப்படுகிறது.

# 6 மாவட்டங்கள் தவிர்த்து ஊரடங்கு இன்று நீக்கம்

கொழும்பு, ஏப். 02

யாழ்ப்பாணம், கொழும்பு, களுத்துறை, கண்டி, கம்பஹா, புத்தளம் ஆகிய மாவட்டங்களை தவிர்ந்த ஏனைய மாவட்டங்களில்

ஊரடங்குச் சட்டம் இன்று காலை 6 மணியளவில் தளர்த்தப்பட்டது.

குறித்த மாவட்டங்களில் தளர்த்தப்பட்ட ஊரடங்குச் சட்டமானது, பிற்பகல் 2 மணிக்கு மீள அமுல்படுத்தப்பட்டது.

நாட்டில் கொரோனா கிருமி பரவலைக் கட்டுப்படுத்தும் முகமாக ஊரடங்குச் சட்டம் அரசால் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# திருமலையில் கைதிகளை பாதுகாப்பதற்கு நடவடிக்கை

திருகோணமலை சிறைச்சாலையில் உள்ள கைதிகளை, கொறொனா தொற்றிலிருந்து பாதுகாப்பதற்கு.ல் விசேட நட வடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இது தொடர்பிலான கலந்துரையாடல், இலங்கை செஞ்சிலுவை சங்கம், சிறைச்சாலை அதிகாரிகளுக்கிடையில், திருகோணமலை சிறைச்சாலையில், நேற்று நடைபெற்றது.

சிறைச்சாலையின் அத்தியட்சகர் ரஜீவ சிறிமால் சில்வா தலைமையில் நடைபெற்ற இந்தக் கலந்துரையாடலில், செஞ்சிலுவை சங்கத்தின் வடக்கு – கிழக்கு மாகாண இணைப்பாளர் பி.பற்றிக், உதவியாளர் போல்ராஜ் ஆகியோர் கலந்துகொண்டனர்.

இதன்போது கைதிகளை, கொரொனா வைரஸ் தொற்றிலிருந்து எவ்வாறு பாதுகாப்பது, எவ்வாறான சுகாதார வழிகளை ஏற்படுத்துவது, கிருமி தெளிப்பு நடவடிக்கைகள் தொடர்பாகவும் கலந்துரையாடப்பட்டது.

சிறைச்சாலையின் பாதுகாப்பு நடைமுறைகள் தொடர்பாக, செஞ்சிலுவை சங்க பிரதிநிதிகள், அத்தியட்சகரிடம் கேட்டறிந்தார்கள்.

இதன்போது திருகோணமலை சிறைச்சாலையில் உள்ள கைதிகளை, கொரோனா தொற்றிலிருந்து பாதுகாப்பதற்கான பொருள்களும் அத்தியட்சகரிடம் கையளிக்கப்பட்டன.

இக்கலந்துரையாடலில் பிரதான ஜெயிலர், களஞ்சிய காப்பாளர், புனர்வாழ்வு அதிகாரி, மருந்தாளர் போன்ற அதிகாரிகளும் கலந்துகொண்டனர்.

# அரச பணியாளர் சம்பளத்தில் மராட்டியில் 50 வீதம் வெட்டு

புதுடில்லி, ஏப்ரல் 2

கொரோனா வைரசால் ஏற்பட்ட நிதி நெருக்கடியைச் சமாளிப்பதற்காக சட்டசபை உறுப்பினர்களின் சம்பளத்தில் 60சதவீதமும், அரசு ஊழியர்கள் சம்பளத்தில் 25 முதல் 50 சதவீதமும் எடுக்கப்படுவதாக மாராட்டிய மாநில அரசு அறிவித்துள்ளது.

இந்தியாவில் கொரோனா வைரஸ் அதிகம் பாதித்த மாநிலமாக மராட்டியம் விளங்குகிறது. இங்கு கொரோனா தடுப்பு பணிகள் முழுவீச்சில் நடந்தபோதும், பாதிக்கப்படுவோர் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரித்து இருப்பது அரசுக்கு பெரும் சவாலை ஏற்படுத்தி உள்ளது.

பொருளாதாரம் முடங்கி போனதால், அரசுக்குக் கடும் நிதி நெருக்கடி ஏற்பட்டுள்ளது. நெருக்கடியை சமாளிக்க அரசியல்வாதிகள் மற்றும் அரச பணியாளர்களின் சம்பளத்தில் கை வைக்க ஆட்சியாளர்கள் தீர்மானித்துள்ளனர்.

இதுகுறித்து மராட்டிய துணை முதலமைச்சரும், நிதியமைச்சருமான அஜித் பவார் விடுத்துள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:–

கொரோனா வைரசை எதிர்த்து போராட வேண்டிய நிலை இருப்பதால், முதலமைச்சர், அமைச்சர்கள், சட்டசபை உறுப் பினர்கள் மற்றும் உள்ளாட்சி அமைப் புகளின் மக்கள் பிரதிநிதிகள் சம்பளத்தில் 60 சதவீதத்தை அரசு மீளப் பெறத் தீர் மானித்துள்ளது.

அதுபோன்று முதல் நிலை மற்றும் இரண்டாம் நிலை அரசு பணியாளர்கள் சம்பளத்தில் 50 சதவீதமும், 3ஆம் நிலை அரசு பணியாளர்கள் சம்பளத்தில் 25 சதவீதமும் எடுக்கப்படுகிறது. மற்ற ஊழி யர்களின் சம்பளத்தில் பிடித்தம் எதுவும் செய்யப்படாது.

முதலமைச்சர் உத்தவ் தாக்கரே மற்றும் அனைத்து தொழிற்சங்கங்களுடன் விரிவாக ஆலோசனை நடத்திய பிறகு இந்த முடிவு எடுக்கப்பட்டு உள்ளது.

கொரோனா வைரசால் பொருளாதாரம் முடங்கி கிடப்பதால் அரசுக்கு நிதி ஆதாரம் இல்லை என்பதால், இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு உள்ளது. இதற்குமக்கள் பிரதிநிதிகளும், அரசு ஊழியர் களும் ஒத்துழைப்பு வழங்குவார்கள் என்று நம்புகிறேன் – என்றுள்ளது.

## கொரோனா குறித்த இணைய தளம் உருவாக்க இந்திய அரசுக்கு பணிப்பு

### விடுத்தது உச்ச நீதிமன்றம்

புதுடில்லி, ஏப்ரல் 2

கொரோனா குறித்த வதந்திகளை கட்டுப்படுத்தி மக்களுக்கு உண்மையான தகவல்களை தெரிவித்து விழிப்புணர்வை ஏற்படுத்த புதிய இணையதளத்தை உருவாக்குமாறு மத்திய அரசுக்கு இந்திய உச்ச நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

கொரோனா வைரஸ் பரவுவதை கட்டுப்படுத்தும் வகையில், இந்தியாவில் 21 நாள் ஊரடங்கு பிறப்பிக்கப்பட்ட நிலையில் பிற மாநிலங்களுக்குச் சென்று, தங்கி கட்டிட வேலை உள்ளிட்ட கூலித் தொழில்களைச் செய்து வந்த தொழிலாளர்கள், வருமானம் இன்மையால் தங்கள் சொந்த ஊர்களுக்கு செல்ல தொடங்கினார்கள்.

சமூக விலகலுக்கு அச்சுறுத்தல் ஏற்படுத்தும் வகையிலமைந்தது இந்த இடம்பெயர்வு.

இந்த பிரச்சினை தொடர்பாக அலோக் ஶ்ரீவஸ்தவா, ராஷ்மி பன்சால் என்ற இரு சட்டவாளர்கள் உச்ச நீதிமன்றில் பொதுநல வழக்குத் தாக்கல் செய்தனர். நேற்றுமுன்தினம் காணொலி காட்சி மூலம் விசாரணை நடத்திய தலைமை நீதிபதி எஸ்.ஏ.போப்டே, நீதிபதி எல்.நாகேஸ்வரராவ் ஆகியோர், வெளிமாநில தொழிலாளர்கள் வெளியேறுவதை தடுக்க எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் குறித்து அறிக்கை தாக்கல் செய்யுமாறு மத்திய அரசுக்கு உத்தரவிட்டு, வழக்கு விசாரணையை நேற்றைக்கு (செவ்வாய்க்கிழமை) ஒத்திவைத்தனர்.

நேற்று விசாரணை தொடங்கியதும் மத்திய அரசு தரப்பில் ஆஜரான சொலிசிட்டர் ஜெனரல் துார் மேத்தா, பிற நாடுகளைப் போலன்றி இந்தியா கொரோனாவால் பாதிக்கப்பட்ட முதல் நபரை அடையாளம் காண்பதற்கு முன்பே நோய் பரவுவதை தடுக்கும் வகையில் பல்வேறு முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை மேற்கொண்டதாக தெரிவித்தார்.

இது தொடர்பாக விரிவான நிலைத்தகவல் அறிக்கையையும் அவர் தாக்கல் செய்தார்.

இதைத்தொடர்ந்து நீதிபதிகள் சில உத்தரவுகளைப் பிறப்பித்தனர்.

தொழிலாளர்கள் தங்க வைக்கப்பட்டுள்ள சிறப்பு முகாம்களில் அடிப்படை வசதிகள், மருத்துவ வசதிகளை உரிய வகையில் ஏற்படுத்த வேண்டும். கோடைகாலம் நெருங்குவதால் இந்த முகாம்களில் தண்ணீர், உணவு, மருந்து ஆகியவற்றுக்கு தட்டுப்பாடு ஏற்படாமல் பார்த்துக் கொள்ளவேண்டும்.

கொரோனா நோயை விட பீதியும், அச்சமும் அதிக உயிர்களை அழிக்கும் ஆபத்து கொண்டது. எனவே, நிபுணர்கள் அடங்கிய உயர்மட்ட குழுவை அமைத்து கொரோனா தொடர்பான விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் சரியான தகவல்களை மக் களிடையே பரப்புவதற்கு ஏற்பாடு செய்யவேண்டும்.

பயிற்சி பெற்ற ஆலோசகர்கள் மற்றும் அனைத்து மதங்களின் தலைவர்களைக் கொண்டு மாநிலங்கள் அனைத்திலும் உள்ள சிறப்பு முகாம்களில் தங்க வைக்கப்பட்டுள்ள இடம் பெயரும் தொழிலாளர்களுக்கு மன தைரியமும், கொரோனா குறித்த விழிப்புணர்வும் அளிக்க ஏற்பாடு செய்ய வேண்டும்.

மத்திய அரசு 24 நேரத்துக்குள் ஒரு இணையதளத்தை உருவாக்கி, அதன் மூலம் கொரோனா தொடர்பான விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் சரியான செய்திகளை மக்களிடையே கொண்டு செல்லவேண்டும். தவறான செய்திகளையும் வதந்திகளையும் முறியடிக்கும் வகையில் அந்த இணையதளம் இயங்க வேண்டும்.

இவ்வாறு அந்த உத்தரவில் கூறப்பட்டுள்ளது. பின்னர் வழக்கு விசாரணையை வருகிற 7ஆம் திகதிக்கு நீதிபதிகள் ஒத்தி வைத்தனர்.

## புதுச்சேரியில் கிராமம் முழுவதும் முடக்கம்!

### 2 பேருக்கு தொற்று ஏற்பட்டதை அடுத்து

சென்னை, ஏப்ரல் 2

புதுச்சேரியில் 2 பேருக்கு கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டதையடுத்து அவர்கள் வசித்து வந்த ஊருடனான வெளித் தொடர்புகள் முழுமையாக முடக்கப்பட்டுள்ளன.

இந்தியாவில் கொரோனா வைரஸ் வேகமாக பரவி வரும் நிலையில், வெளி மாநிலங்கள் மற்றும் வெளிநாடுகளில் இருந்து வந்த அனைவரும் கண்காணிக்கப்படுகின்றனர். அந்த வகையில் டெல்லியில் நடைபெற்ற இஸ்லாமிய மாநாட்டில் பங்கேற்று திரும்பிய புதுச்சேரியைச் சேர்ந்த 2 பேருக்கு கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

இதனையடுத்து அவர்கள் வசித்து வந்த அரியாங்குப்பம் சொர்ணா நகர் பகுதி மூடப்பட்டுக் கண்காணிக்கப்படுகிறது. போக்குவரத்து தடை செய்யப்பட்டுள்ளது. அப்பகுதி முழுவதும் பொலிஸாரின் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்பட்டு உள்ளது.

புதுச்சேரியில் கொரோனா தொற்று ஏற்பட்டு குணமடைந்த பெண் வீடு திரும்பிய நிலையில், புதிதாக 2 பேருக்கு கொரோனா பாதிப்பு உள்ளது கண்டறியப்பட்டிருப்பது சிக்கலை உருவாக்கியிருக்கிறது.

## மதுபான அடிமைகளுக்கு கேரளாவில் சிறப்பு பாஸ்

குடியை விடமுடியாமல் தவிக்கும் மது அடிமைகளுக்கு மருத்துவர்களின் சிபாரிசின் பேரில், மதுபானம் வாங்க கேரள அரசு சிறப்பு 'பாஸ்' வழங்குகிறது.

கொரோனா ஊரடங்கைத் தொடர்ந்து இந்தியாவின் கேரள மாநிலத்தில் 21 நாட்களுக்கு மதுக்கடைகள் மூடப்பட்டு இருக்கின்றன. இதனால் மது அடிமைகள் தவித்து வருகிறார்கள்.

குடிக்கு அடிமையானவர்கள் திடீர் என்று அதை நிறுத்துவதால் உடல் ரீதியாகவும், மனரீதியாகவும் பாதிக்கப்படுகிறார்கள் என்பதை மருத்துவ உலகம் ஏற்றுக் கொண்டுள்ளது. இதனால் அவர்களுக்கு கைகால் நடுக்கம், மயக்கம், வலிப்பு, தூக்கமின்மை போன்ற பக்க விளைவுகள் ஏற்படுகின்றன.

சிலர் தற்கொலைகூடச் செய்து கொள்கிறார்கள். இவ்வாறாக கேரளாவில் இதுவரை 3 பேர் தற்கொலை செய்து இருக்கிறார்கள்.

இதையடுத்து குடிப் பழக்கத்தை விடமுடியாத மது அடிமைகளுக்குக் கேரள அரசு சிறப்பு 'பாஸ்'கள் வழங்குகிறது.

இதற்கான உத்தரவு திங்கட்கிழமை இரவு பிறப்பிக்கப்பட்டது.

அதன்படி குடிப்பழக் கத்தை விடமுடியாமல் பக்க விளைவுகளை சந்திப்பவர்களுக்கு மருத்துவர்களின் சிபாரிசுகளின்படி கட்டுப்பாடான அளவில் மதுபானம் .

## கொரோனா தொற்றின் தீவிரம் தெரியாமல் மக்கள் நடமாட்டம்

### தமிழக முதலமைச்சர் எடப்பாடி கவலை



சென்னை, ஏப்ரல் 2

கொரோனா வைரஸ் தொற்றின் தீவிரம் தெரியாமல் தமிழக மக்கள் வெளியே நடமாடுவதாகக் கவலை தெரிவித்த முதலமைச்சர் எடப்பாடி.பழனிச்சாமி, மக்கள் ஒத்துழைப்பு அளித்தால் மட்டுமே கொரோனா வைரஸ் பரவலை தடுக்க முடியும் என்றார்.

கொரோனா வைரசை கட்டுப்படுத்த இந்தியா முழுவதும் ஊரடங்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. எனினும் அத்தியாவசியத் தேவைகளுக்காக மக்கள் கடைகள், மருந்தகங்கள், சந்தைகளுக்குச் சென்றுவர அனுமதிக்கப்படுகிறார்கள்.

ஊரடங்கு அடித்தட்டு மக்கள் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளனர். சரியான உணவு கிடைக்காமல் அவதிப்படுகின்றனர்.

தமிழகத்தில் உள்ள அம்மா உணவங்கள் இந்தச் சமயத்தில் ஏழை மக்களுக்கு பெரிதும் கைகொடுக்கின்றன. குறைந்த விலையில் உணவு வழங்குவதால், ஏராளமானோர் அம்மா உணவகத்தில் சாப்பிடுகின்றனர்.

இந்த நிலையில் சென்னை சாந்தோம் மற்றும் கலங்கரை விளக்கம் பகுதியில் உள்ள அம்மா உணவகங்களில் முதலமைச்சர் எடப்பாடி பழனிசாமி ஆய்வு செய்தார். உணவின் தரம் மற்றும் ஊழியர்கள் சுகாதாரமான முறையில் உணவு சமைக்கிறார்களா என்பதை முதல்வர் ஆய்வு செய்தார். உணவை சாப்பிட்டு பார்த்த அவர், அங்கு சாப்பிட வந்திருந்தவர்களிடம் உணவின் தரம் குறித்தும் கேட்டுத் தெரிந்துகொண்டார்.

பின்னர் செய்தியாளர்களை சந்தித்த முதலமைச்சர், கொரோனா வைரசால் பாதிக்கப்படுவோருக்கு சிகிச்சை அளிப்பதற்காக தமிழகத்தில் 17 ஆயிரம் படுக்கைகள் தயார் நிலையில் உள்ளதாக தெரிவித்தார். மேலும், அவர் கூறியதாவது:–

தமிழகத்தில் நேற்று இரவு வரை 124 பேருக்கு கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. டெல்லி மாநாட்டில் பங்கேற்றவர்கள் விவரம் தெரியாததால் அரசுக்கு தாங்களாகவே தகவல் தெரிவிக்கும்படி கேட்டுக்கொண்டோம். தாங்களாகவே முன் வந்து தகவல் அளித்தால் உரிய சிகிச்சை வழங்கப்படும்.

நோயின் தீவிரம் தெரியாமல் மக்கள் வெளியே நடமாடுகின்றனர். ஊரடங்கு உத்தரவு மற்றும் கொரோனா தடுப்பு நடவடிக்கைகளுக்கு பொதுமக்கள் முழு ஒத்துழைப்பு அளிக்க வேண்டும். மக்கள் ஒத்துழைப்பு அளித்தால்தான் கொரோனா வைரஸ் பரவலைத் தடுக்க முடியும். ஒவ்வொருவரின் உயிரும் அரசுக்கு முக்கியம் என்பதால் தடை உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

அம்மா உணவகங்கள் இன்று கைகொடுத்துள்ளன. இங்கு மட்டும்தான் ஒரு ரூபாய்க்கு இட்லி தரப்படுகிறது.

இவ்வாறு அவர் கூறினார்.

# காட்டுத் தீயில் சிக்கி சீனாவில் 19 பேர் சாவு

பெய்ஜிங், ஏப். 01

சீனாவில் காட்டுத்தீயில் சிக்கி தீயணைப்பு வீரர்கள் 19 உயிரிழந்தனர்.

சிச்சுவான் மாகாணத்தின் லியாங்சன் பிராந்தியத்தில் உள்ள பண்ணை ஒன்றில் நேற்றுமுன்தினம் இரவு திடீரென தீப்பிடித்தது. பலத்த காற்றின் காரணமாக அருகில் உள்ள காட்டுப்பகுதிக்கு தீ வேகமாகப் பரவியது. பல ஏக்கர் நிலப்பரப்பில் காட்டுத்தீ கொழுந்து விட்டு எரிந்தது.

தீ பரவிய காட்டு பகுதியை சுற்றியுள்ள குடியிருப்புகளில் வசித்து வந்த ஆயிரத்து 200க்கும் மேற்பட்ட மக்கள் உடனடியாகப் பாதுகாப்பான இடத்துக்கு அப்புறப்படுத்தப்பட்டனர்.

அதனைத் தொடர்ந்து, நூற்றுக்கும் மேற்பட்ட தீயணைப்பு வாகனங்களில் சுமார் 2 ஆயிரம் வீரர்கள் வரவழைக்கப்பட்டு தீயை அணைக்கும் பணிகள் முடுக்கி விடப்பட்டன.

விடிய விடிய இந்த பணிகள் தொடர்ந்த நிலையில் நேற்று அதிகாலை காற்றின் திசை திடீரென மாறியதால் தீயணைப்பு வீரர்கள் இருந்த பகுதியைக் காட்டுத்தீ நாலாபுறமும் சூழ்ந்து கொண்டது.

தீயின் கோரப்பிடியில் சிக்கி 19 தீயணைப்பு வீரர்கள் சம்பவ இடத்திலேயே உடல் கருகி உயிரிழந்தனர்.

3 பேர் பலத்த தீக்காயங்களுடன் மீட்கப்பட்டனர். கடந்த ஆண்டு மார்ச் மாதமும் இதே லியாங்சன் பிராந்தியத்தில் பயங்கர காட்டுத்தீ ஏற்பட்டது. அதில் 30 தீயணைப்பு வீரர்கள் உயிரிழந்தனர்.

கொரோனாவால் ஏற்பட்ட பாதிப்பில் இருந்து சீன மக்கள் முழுமையாக மீண்டு வருவதற்குள் அங்கு காட்டுத்தீயில் சிக்கி 19 பேர் உயிரிழந்த சம்பவம் பெரும் சோகத்தை ஏற்படுத்தி உள்ளது.

## சிறையை உடைத்து 54 கைதிகள் தப்பினர்

### ஈரானில் நடந்தது சம்பவம்

ஈரானில் சிறையை உடைத்து 54 கைதிகள் தலைமறைவாகி விட்ட நிலையில் அவர்களை பொலிஸார் தீவிரமாகத் தேடி வருகின்றனர்.

ஈரானின் குர்திஸ்தான் மாகா ணம் சகேஸ் நகரில் மிகப் பெரியசிறைச்சாலைஉள்ளது. இங்குகொலைகுற்றவாளிகள் உள்படஏராளமானகைதிகள்அடைத்துவைக்கப்பட்டுள்ளனர்.

கடந்த வெள்ளிக்கிழமை இரவு சிறையில் சிறைக்காவலர்கள் வழக்கமான ரோந்து பணியில் ஈடுபட்டிருந்தனர். அப்போது, கைதிகள் சிலர் திடீர் வன்முறையில் ஈடு பட்டனர். அவர்கள் சிறைக்காவ லர்களை கடுமையாக தாக்கிவிட்டு சிறை உடைத்து தப்பியோடினர்.

இப்படி 74 கைதிகள் சிறையில் இருந்து தப்பியோடினர். இதைய டுத்து, கூடுதல் போலீஸ் படை வரவழைக்கப்பட்டு அவர்களை தேடும் பணி முடுக்கிவிடப்பட்டது. இதில் 20 கைதிகள் பொலிஸாரி டம் பிடிபட்டனர். அவர்கள் மீண்டும் சிறையில் அடைக்கப்பட்டனர்.

மற்ற 54 கைதிகள் தலைமறைவாகி விட்டனர். அவர்களை பொலிஸார் தீவிரமாகத் தேடி வருகின்ற னர். கைதிகள் சிறையை உடைத்து தப்பிச் சென்ற விவகாரத்தில் சிறைக் காவலர்களுக்கும் தொடர்பு இருப் பது தெரியவந்துள்ளது. இது தொடர்பாக 4 சிறைக்காவலர்கள் கைது செய்யப்பட்டுஉள்ளனர். மேலும்பலருக்குவலைவீசப்பட்டுள்ளது.

## 2ஆம் உலக போருக்கு பின்னான மிகப் பெரும் சவால் கொரோனா

### ஐ.நா. பொதுச் செயலாளர் எச்சரிக்கை

கொரோனா வைரஸால் தற்போது ஏற்பட்டுள்ள நெருக்கடி இரண்டாம் உலகப் போருக்குப் பின்னர் இந்த உலகம் எதிர்கொள்ளும் மிகப்பெரும் சவால் என்று எச்சரித்தார் ஐக்கிய நாடுகளின் பொதுச் செயலாளர் அன்டோனியோ குட்டரஸ்.

கொரோனாவால் ஏற்பட்டிருக்கும் சமூகப் பொருளாதாரப் பாதிப்புக்கள் குறித்த அறிக்கையை ஐ.நா. தலைமைய கம் அமைந்துள்ள நியூயோர்க்கில் வெளியிட்டு வைத்துப் பேசினார் அவர்.

அண்மைக் காலத்தில் இந்த உலகம் காணாத அளவிற்கான பின்னடைவை இது ஏற்படுத்தும் என்றும் அவர் தெரிவித்தார்.

கொரோனா வைரஸ் பரவலைக் கட்டுப்படுத்துவதற்காக உலக நாடுகள் எடுத்துவரும் ஊரடங்கு மற்றும் முடக்கம் உள்ளிட்ட நடவடிக்கைகளால் ஏற்படும் பொருளாதாரப் பாதிப்புக்களின் முன்னறிவிப்பாக அவரது கருத்து வெளிவந்துள்ளது.

உலகம் முழுவதும் 8 லட்சத்து 60 ஆயிரத்துக்கும் மேற்பட்டவர்கள் கொரோனா தொற்றுக்குள்ளாகி இருக்கிறார்கள். 42 ஆயிரம் பேர் உயிரிழந்திருக்கிறார்கள்.

அடுத்து வரும் மாதங்களில் சுமார் இரண்டரைக் கோடிப் பேர் வேலையிழப்பார்கள் என்று ஐ.நா. அறிக்கை மதிப்பிட்டிருக்கிறது. நாடுகளின் வெளிநாட்டு முதலீடுகளில் இது 40 சதவீத வீழ்ச்சியையாவது ஏற்படுத்தும் என்றும் அறிக்கை எதிர்பார்க்கின்றது.

“ஐக்கிய நாடுகள் உருவாக்கப்பட்டதன் பின்னர் நாம் அனைவரும் இணைந்து எதிர்கொள்ளும் மிகப் பெரிய சோதனை கொவிட் – 19” என்றார் குட்டரஸ்.

நோய்த் தொற்று காட்டுத் தீ போன்று பரவக்கூடிய வளர்ச்சியடைந்து வரும் நாடுகளுக்கு வளர்ந்த நாடுகள் தமது உதவிகளைத் தாராளமாக வழங்கவேண்டும் என்றும் அவர் வலியுறுத்தினார்.

ஐக்கிய நாடுகள் அவை நிறுவப்பட்ட பிறகு, மிக மோசமான உலக நெருக்கடியாக, ஏன் கொரோனா பெருந்தொற்றை நீங்கள் கருதுகிறீர்கள் என்று குட்டரசிடம் கேள்வி எழுப்பப்பட்டது.

“ஒருபுறம் உலக மக்கள் அனைவருக்கும் அச்சுறுத்தலாக உள்ளது. இன்னொரு புறம், பொருளாதார தாக்கத்தை ஏற்படுத்துகிறது” என்றார் அவர்.

## கொரோனா துளிகள்

* பாதிக்கப்பட்ட மொத்த நாடுகள், நிலங்கள்: **203**
* உயிரிழந்தோர்: **42 ஆயிரத்து 340**
* தொற்றுக்குள்ளானோர்: **8 லட்சத்து 59 ஆயிரம்**
* குணமானோர்: **ஒரு லட்சத்து 78 ஆயிரம்**
* மோசமான நிலையிலுள்ளோர்: **33 ஆயிரம்**
* ஆகக் கூடுதல் இறப்பு: இத்தாலி நாட்டில் **12 ஆயிரத்து 428**
* ஆகக் கூடுதல் தொற்று: அமெரிக்கா நாட்டில் **ஒரு லட்சத்து 89 ஆயிரம்**
* இறப்பில் இரண்டாம் இடம்: ஸ்பெயின் நாடு, **8 ஆயிரத்து 464**
* இன்றைய தொற்று நிலை: மதியம் வரை **ஆயிரத்து 382**
* 50 ஆயிரத்துக்கு மேல் தொற்று: 5 நாடுகள், அமெரிக்கா, ஸ்பெயின், சீனா, ஜேர்மனி, பிரான்ஸ்
* 15 ஆயிரத்துக்கு மேல் தொற்று: 3 நாடுகள், ஈரான், பிரிட்டன், சுவிற்சர்லண்ட்
* 10 ஆயிரத்துக்கு மேல் தொற்று: 4 நாடுகள், துருக்கி, பெல்ஜியம், நெதர்லண்ட், ஒஸ்ரியா
* 5 ஆயிரத்துக்கு மேல் தொற்று: 5 நாடுகள், தென்கொரியா, கனடா, போர்த்துக்கல், பிரேசில், இஸ்ரேல்.
* 3 ஆயிரத்துக்கு மேல் தொற்று: 5 நாடுகள், ஆஸ்திரேலியா, நோர்வே, சுவீடன், செஸ்சியா, அயர்லண்ட்
* 2 ஆயிரத்துக்கு மேல்: 11 நாடுகள், டென்மார்க், மலேசியா, சிலி, ரஷ்யா, பொலன்ட், ஈகுவடோர், ரொமானியா, ஜப்பான், லக்ஸம்பேர்க், பிலிப்பைன்ஸ், பாகிஸ்தான்
* அமெரிக்காவில் இன்னும் 30 நாள்களுக்கு கொரோனா நெருக்கடி நீடிக்கும் என்று தெரிவித்திருக்கிறார் அதிபர் டொனால்ட் ட்ரம்.
* அமெரிக்கா மற்றும் பிரான்ஸ் நாடுகளில் கொரோனாவால் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை சீனாவின் எண்ணிக்கையை விஞ்சிவிட்டது. 4 ஆயிரத்து 55 பேர் அமெரிக்காவிலும் 3 ஆயிரத்து 523 பேர் பிரான்ஸிலும் உயிரிழந்திருக்கின்றனர். சீனாவில் இந்த எண்ணிக்கை 3 ஆயிரத்து 312.
* கொலன்ட் அமெரிக்கா என்கிற உல்லாசப் பயணக் கப்பலில் கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளானவர்கள் பலர் இருப்பதால் அந்தக் கப்பல் தனது கரையை அடைவதை அமெரிக்காவின் புளோரிடா மாநில ஆளுநர் விரும்பவில்லை. கப்பலில் உள்ள 100 பயணிகள் மற்றும் கடலோடி ஒருவர் தொற்றுக் காய்ச்சலால் பாதிக்கப்பட்டுள்ளனர். இது கொவிட் -19 ஆக இருக்கும் என்று அஞ்சப்படுகின்றது. கப்பல் புளோரிடாவின் லௌடர்டாலே துறைமுகத்தை நோக்கி வந்து கொண்டிருக்கின்றது. ஆனால், மாநிலத்தில் 2 கோடி 20 லட்சம் பேர் உள்ள நிலையில் வெளிமாநிலத்தவர்களோ கப்பல்களில் வருபவர்களோ புளோரிடாவுக்குள் நுழைவது தேவையற்ற பிரச்சினைகளை ஏற்படுத்தும் என்று ஆளுநர் கருத்துத் தெரிவித்தார்.
* அமெரிக்காவின் தியோடர் ரூஸ்வெல்ட் விமானந் தாங்கிக் கப்பலில் உள்ள படையினருக்கும் கொரோனா தொற்று ஏற்பட்டுள்ளது. 4 ஆயிரம் பேர் அந்தக் கப்பலில் உள்ளனர். அவர்களில் குறைந்தது 100 பேருக்கு தற்போது தொற்று ஏற்பட்டுள்ளது. “இப்போது போர் இல்லை, கடற்படையினர் உயிரிழப்பது ஏற்கக்கூடியதல்ல” என்று கப்பலின் கப்டன் நாட்டின் பாதுகாப்புத் தலைமையகமான பென்ரகனுக்கு அனுப்பிய கடிதத்தில் தெரிவித்துள்ளார்.
* பிரிட்டன் சிறைகளில் அடைக்கப்பட்டுள்ள குற்றவாளிகளான கர்ப்பிணிப் பெண்கள் மற்றும் குழந்தைகளுடன் உள்ள பெண்களை விடுவிப்பதற்கு முடிவு செய்யப்பட்டுள்ளது. அவர்களுக்கு கொரோனா தொற்று ஏற்படுவதைத் தடுப்பதற்காக இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது. பிரிட்டன் சிறைகளில் இதுவரை 65 கைதிகளுக்கும் 14 சிறை ஊழியர்களுக்கும் கொரோனா தொற்று ஏற்பட்டுள்ளது.
* கொரோனா பாதிப்பினால் பிரிட்டனில் 13 வயதுச் சிறுவன் ஒருவன் உயிரிழந்திருக்கின்றான்.
* பிரான்ஸில் 31ஆம் திகதி நள்ளிரவுக்கு முன்பான 24 மணி நேரத்தில் கொரோனா தொற்றால் 499 பேர் வைத்தியசாலைகளில் உயிரிழந்துள்ளனர்.
* உலகின் மிகப் பெரிய விமான நிறுவனங்களில் ஒன்றான எமிரேட்ஸ் தற்போதைய நெருக்கடி நிலையில் இருந்து மீளத் தேவையான நிதி உதவி வழங்கப்படும் என்று துபாய் அரசு அறிவித்துள்ளது. எமிரேட்ஸ் நிறுவனத்தின் ஒரு லட்சம் பணியாளர்களுக்கும் தற்போதைய நிலையில் வீடுகளில் இருக்க நிர்பந்திக்கப்பட்டிருக்கிறார்கள்.
* தண்டனைக் கைதிகளால் நிறைந்து வழியும் கொலம்பியச் சிறைகளில் உள்ளவர்களை கொரோனா தொற்றிலிருந்து பாதுகாப்பதற்கு என்ன திட்டத்தை அரசு வைத்துள்ளது என்று அந்த நாட்டு உயர் நீதிமன்றம் கேள்வி எழுப்பியுள்ளது. அதிகாரிகள் பதிலளிப்பதற்கு 3 நாள்கள் கால அவகாசம் வழங்கப்பட்டுள்ளது. நாட்டில் வைரஸ் தொற்று தீவிரமாகப் பரபுவதை அடுத்து ஏற்பட்ட பதற்றம் காரணமாக கடந்த 20ஆம் திகதி சிறையை உடைத்துக்கொண்டு தப்புவதற்கு கைதிகள் எடுத்த முயற்சிகளை அதிகாரிகள் தடுத்தபோது 20 கைதிகள் கொல்லப்பட்டனர். இதையடுத்தே நீதிமன்றம் இந்தக் கேள்வியை எழுப்பியுள்ளது.



– சச்சின் கோகோய் –

# கொரோனா வைரஸ்; சீனாவின் ஓர் உயிரி ஆயுதத் திட்டமா?

## இந்தியாவில் பெருகும் சீனாவுக்கு எதிரான உரையாடல்

கொரோனா வைரஸ் சிக்கலை சமாளிப்பதற்காக 130 கோடி மக்கள் தொகை கொண்ட இந்தியா பொது நடமாட்ட முடக்கத்தை எதிர்கொண்டு வருகிறது. இது முன்னெப்போதும் கண்டிராத அளவுக்கு மிகப் பெரிய முடக்கமாகும்.

இந்நிலையில் உலக அளவில் இந்த கொரோனா வைரஸ் பரவியதற்கு சீனா எந்த அளவுக்குக் காரணமாக இருந்தது என்பதைப் பற்றி வல்லுநர்களும் ஊடகங்களும் விவாதிப்பது இந்தியாவில் நடந்து வருகிறது.

இதன் ஊடாக சீனாவுக்கு எதிரான உரையாடல் இந்தியாவில் வளர்ந்து வருகிறது.

சீனா இந்த கொரோனா வைரஸ் சிக்கலை சமாளித்த விதம் குறித்துக் குற்றஞ்சாட்டி இந்தியர்கள் பலர் ட்விட்டர் உள்ளிட்ட சமூக ஊடகங்களில் பதிவிட்டு வருகின்றனர்.

சமீப காலம் வரை வலைப்பூக்களிலும் சில குறிப்பிட்ட சமூக ஊடகக் கணக்குகளிலும் உணர்ச்சியூட்டும் சில தொலைக்காட்சி சனல்களிலும் விவாதிக்கப்பட்டு வந்த சதிக் கோட்பாடுகள் தற்போது மைய நீரோட்ட ஊடகங்களிலும் விவாதிக்கப்படுகின்றன.

கொரோனா வைரஸ் என்பது உண்மையில் சீனாவின் ஓர் உயிரி ஆயுதத் திட்டமா என அவை விவாதிக் கின்றன.

கொரோனா வைரஸ் பரவல் சீனாவில் தொடங்கிய போது இந்திய முன்னணி ஊடகங்கள் அது குறித்து செய்தி வெளியிட்டவிதம் பெரும்பாலும் கட்டுப்பாட்டோடும், சீன அரசாங்கம் குறித்து நடுநிலைத் தன்மையோடும் இருந்ததாகவே தோன்றியது. சில இந்தி சனல்கள் மட்டும் விதிவிலக்காக கோவிட் 19 வைரஸ் என்பது சீனாவால் உருவாக்கப்பட்டது என்ற சரி பார்க்கப்படாத தகவலை விவாதித்துக் கொண்டிருந்தன.

ஆனால் இந்தியாவின் முன்னணி ஊடகங்கள், சீனாவின் கொரோனோ பாதித்த பகுதிகளிலிருந்து இந்தியர்களை வெளியேற்றுவது தொடர்பான தகவல்களுக்கு முக்கியத்துவம் கொடுத்து செய்திகளை வெளியிட்டுக் கொண்டிருந்தன.

இந்தியாவில் 21 நாள்கள் பொது நடமாட்ட முடக்கம் அறிவிக்கப்பட்டுள்ள நிலையில், சீனாவுக்கு எதிரான குற்றச்சாட்டுகளை நம்பகமான ஊடக நிறுவனங்களும், வல்லுநர்களும் விவாதிக்கும் நிலை உருவாகியுள்ளது. நடந்துவரும் சிக்கலுக்கு சீனா பொறுப்பேற்க வேண்டும் என்று அவர்கள் கோருகிறார்கள்.

வைரஸ் பரவலைக் கட்டுப்படுத்துவதற்கான வழிமுறைகளை விவாதிப்பதற்காகச் சீனாவோடு தொடர்ந்து இந்திய அரசு தொடர்பில் இருக்கும் நிலையில் செல்வாக்கு மிக்க இந்திய ஊடகங்கள் இந்த வைரஸ் பரவலுக்கு சீனா பொறுப்பேற்க வேண்டும் என்று கோருகின்றன.

இந்திய வெளியுறவுத்துறை அமைச்சர் ஜெய்சங்கர் சீன வெளியுறவு அமைச்சர் வாங் இ உடன் ஒரு தொலைபேசி வழி உரையாடல் மேற்கொண்டார் எனவும் அதில் கொரோனா வைரஸை ஒரு 'சீன வைரஸ்' என்று இந்தியா முத்திரை குத்தாது என்று அவர் ஒப்புக்கொண்டார் எனவும் இந்தியாவுக்கான சீன தூதர் சன் வெய்டாங் மார்ச் 24 ஆம் திகதி வெளியிட்ட ட்விட்டர் பதிவு ஒன்றில் தெரிவித்திருந்தார்.

ஆனால் கொரோனா பரவலைத் தவறாக கையாண்டது என்கிற குற்றச்சாட்டு முதல், சீனாவே அந்த வைரஸை உருவாக்கிப் பரப்பியது என்கிற குற்றச்சாட்டு வரை பலவிதமான குற்றச்சாட்டுகளைப் பல இந்திய ஊடகங்கள் சீனா மீது தற்போது சுமத்தி வருகின்றன.

சீனாவே இந்த வைரஸை உருவாக்கி உலகம் முழுவதும் பரப்பியது என்ற குற்றச்சாட்டினை Chinese virus, Chinese virus – 19 ஆகிய ஹேஷ் டேக்குகளை பயன்படுத்தி ட்விட்டரில் இந்தியர்கள் பலர் பரவலாக எழுப்பி வருகின்றனர்.

மார்ச் 25ஆம் திகதி இந்திய அளவிலான முடக்கம் தொடங்கியதிலிருந்து இது நடக்கிறது.


கொரோனா வைரஸ் பரவி வரும் விதம், சீன அதிகாரிகள் வேண்டுமென்றே கவனக் குறைவாகவும், விட்டேத்தியாகவும் இருந்து உலகத்தையே ஆபத்துக்குள்ளாகியிருப்பதைக் காட்டுவதாக பிரபல பாதுகாப்பு மற்றும் தந்திரோபாயத் துறை விமர்சகர் நிதின் கோகலே ஒரு விமர்சனக் கட்டுரையில் குறிப்பிட்டிருந்தார்.

இந்த 'சீன வைரஸ்' உலகம் முழுவதும் பரவி பாதிப்பை ஏற்படுத்தியதற்காக சீனாவின் தேசியத் தலைமையை மனித குலத்துக்கு எதிரான குற்றத்துக்குப் பொறுப்பாக்கும் பணியை உலக நாடுகள் செய்யவேண்டும் என்று அவர் மேலும் கூறியிருந்தார்.

சீனா உயிரி ஆயுதம் ஒன்றைப் பரிசோதித்ததன் விளைவே கொரோனா வைரஸ் என்று நிரூபிப்பது கடினம். ஆனால் கொரோனா வைரஸ் முதல் முதலில் பரவத் தொடங்கிய வுஹான் நகரில்தான் வைரஸ் ஆய்வுக்கான மிகப்பெரிய ஆய்வகம் இருக்கிறது என்கிற உண்மையையும் புறக்கணிப்பது கடினம் என்றும், அந்த ஆய்வகத்தை சீனாவின் அரசு ஊடகங்கள் பெருமையாக கூறி வந்துள்ளன என்றும் பிரபல இந்தி நாளேடான தைனிக் ஜாக்ரனில் வெளியான ஒரு கட்டுரை கூறுகிறது.

சீனாவே இந்த வைரஸை உருவாக்கியது என்றும் இப்போது அதற்கான மருந்துகளையும், தனிநபர் பாதுகாப்பு உபகரணங்களையும் பிற நாடுகளுக்கு ஏற்றுமதி செய்து அதன் மூலம் லாபம் சம்பாதிப்பதாகவும், பிரபல ஆங்கில செய்தி சேனலான இந்தியா டுடேவில் தொகுப்பாளராகப் பணியாற்றும் ஷிவ் ஆரூர் குற்றம்சாட்டினார்.

சீனா ஒரு நம்ப முடியாத, நயவஞ்சகமான நாடு என்றும் அது தற்போது உலகத்துக்கு ஓர் அச்சுறுத்தல் என்றும் குறிப்பிட்ட அவர் அது முதலில் சிக்கலை உருவாக்கிவிட்டு அதை தீர்ப்பதற்கான உலகின் முயற்சிகளிலிருந்து லாபம் சம்பாதிப்பதாகவும் குற்றம் சாட்டினார்.






### உலக சுகாதார நிறுவனம் மீது குற்றச்சாட்டு

இந்திய அரசோ, ஆளும் பாரதீய ஜனதா கட்சியோ கொரோனா வைரஸ் சிக்கலுக்குச் சீனாவைக் குற்றம் சாட்டியதாகத் தெரியவில்லை. ஆனால், பா.ஜ.கவின் கொள்கைக் கூட்டாளியான சுதேசி ஜாக்ரன் மஞ்ச் என்ற அமைப்பு, சீனாவும், உலக சுகாதார நிறுவனமும் கூட்டு சேர்ந்து இந்த சிக்கல் மோசமடைவதை அனுமதித்தன எனக் குற்றம்சாட்டியது.

> **கொரோனா பரவலைத் தவறாக கையாண்டது என்கிற குற்றச்சாட்டு முதல், சீனாவே அந்த வைரஸை உருவாக்கிப் பரப்பியது என்கிற குற்றச்சாட்டு வரை பலவிதமான குற்றச்சாட்டுகளைப் பல இந்திய ஊடகங்கள் சீனா மீது தற்போது சுமத்தி வருகின்றன. சீனாவே இந்த வைரஸை உருவாக்கி உலகம் முழுவதும் பரப்பியது என்ற குற்றச்சாட்டினை Chinese virus, Chinese virus - 19 ஆகிய ஹேஷ் டேக்குகளை பயன்படுத்தி ட்விட்டரில் இந்தியர்கள் பலர் பரவலாக எழுப்பி வருகின்றனர்.**




பொருளாதார விவகாரங்களில் அவ்வப்போது பாஜக தலைமையிலான மத்திய அரசு ஆலோசனை கேட்கும் அமைப்பான இந்த சுதேசி ஜாக்ரன் மஞ்ச், கொரோனா வைரசின் பெயரை 'சீன வைரஸ்' என்று பெயர் மாற்றவேண்டும் என்று உலக சுகாதார நிறுவனத்தை வலியுறுத்துகிறது.

(07 ஆம் பார்க்க)

# படுகொலைக் குற்றவாளிக்கு பொதுமன்னிப்பு அளித்த ஜனாதிபதி கோட்டாவின் செயல் வெறுக்கத்தக்கது!

## கனடா நாடாளுமன்ற உறுப்பினர் ஹரி ஆனந்தசங்கரி கண்டனம்



கொரோனா தொற்று நோயுடன் இலங்கையும் முழு உலகமும் போராடி வருகின்ற இந்த நிலையில் எட்டுத் தமிழர்களை கழுத்தறுத்துப் படுகொலை செய்த குற்றவாளியான முன்னாள் இராணுவ சார்ஜண்ட் ஒருவர் இலங்கை ஜனாதிபதியால் பொது மன்னிப்பு அளிக்கப்பட்டு விடுவிக்கப்பட்டுள்ள செயற்பாடானது வெறுக்கத்தக்கது.

– இவ்வாறு கனடா ஸ்கார்பாரோ– ரூஜ் பார்க் நாடாளுமன்ற உறுப்பினர் ஹரி ஆனந்தசங்கரி கண்டனம் தெரிவித்துள்ளார்.

இலங்கை ஜனாதிபதியின் இவ்வாறான செயல் குறித்து வருத்தம் அடைவதாகவும் அவர் நேற்று வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணம் – மிருசுவில் பகுதியில் வைத்து கடந்த 2000 ஆம் ஆண்டு டிசம்பர் 19 ஆம் திகதி மூன்று குழந்தைகள் உட்பட எட்டு நிராயுதபாணிகளான தமிழ் பொது மக்களை படுகொலை செய்து குற்றம் நிரூபிக்கப்பட்டு சுனில் ரத்நாயக்க குற்றவாளி என இலங்கை உயர் நீதிமன்றம் தீர்ப்பளித்தது.

8 பொதுமக்களையும் கழுத்தறுத்துப் படுகொலை செய்த குற்றச்சாட்டு தொடர்பில் 13 வருட கால விசாரணையின் பின்னர் இந்தத் தண்டனை விதிக்கப்பட்டது.

இலங்கைப் படைகளால் நிகழ்த்தப்பட்ட குற்றங்களுக்கு தண்டயை விலக்கு அளிக்கப்பட்டுவரும் நிலையில் இலங்கையில் அரிதாகக் கிடைத்த நீதியாக இது அமைந்திருந்தது.

மிருசுவில் படுகொலைகளை நேரில் கண்ட சாட்சி தைரியமாக குற்றவாளிகளை அடையாளம் காட்டியதால் இப்படுகொலைக்கு நீதி கிடைத்தது.

எனினும் ஏனைய போர்க்குற்றவாளிகள் யாரும் நீதியின் முன் நிறுத்தப்படவில்லை.

அரிதாகக் கிடைத்த நீதியும் ஜனாதிபதியால் மறுக்கப்பட்டுள்ளதன் மூலம் இலங்கையில் உள்ள தமிழ் மக்களுக்கு இந்த அரசாங்கத்தால் நீதி வழங்கப்படாது. அவர்களுக்கு நீதி கிடைத்தாலும் அதனை இந்த அரசு பொறுத்துக்கொள்ளாது என்பதை இந்தச் சம்பவம் எடுத்துக்காட்டுகிறது எனவும் ஹரி ஆனந்தசங்கரி தனது அறிக்கையில் சுட்டிக்காட்டியுள்ளார்.

பொது மன்னிப்பளிக்க இலங்கை ஜனாதிபதிக்கு உள்ள அதிகாரம் தமிழர்களுக்கு எதிராக தன்னிச்சையாக பாகுபாடு காட்ட அரசு பயன்படுத்தும் மற்றொரு கருவியாகும்.

சர்வதேச சமூகத்தின் பொறுப்புக்கூறல் பொறிமுறை ஒன்று ஸ்தாபிக்கப்படாத நிலையானது இலங்கையின் இன வழிப்பு அரசாங்கம் ஓர் இராணுவ சர்வாதிகாரத்தை நோக்கிய பாதையில் தொடர்ந்து பயணிக்க ஊக்கமளிப்பதாக உள்ளது.

சமீபத்திய மாதங்களில் இலங்கையில் முக்கிய பதவிகளில் போர்க்குற்றங்கள், மிக மோசமான மனித உரிமை மீறல்களில் ஈடுபட்டனர் எனக் குற்றஞ்சாட்டப்படும் இராணுவ அதிகாரிகள் நியமிக்கப்பட்டுள்ளனர். போர்க்குற்றங்கள் மற்றும் மனிதகுலத்திற்கு எதிரான குற்றங்களுக்கு பொறுப்புக்கூற வலியுறுத்தும் ஐ.நா மனித உரிமைகள் பேரவையின் 30/1 தீர்மானத்துக்கு வழங்கிய இணை அனுசரணையில் இருந்து இலங்கை அரசாங்கம் விலகியுள்ளது.

இப்போது தமிழர்களுக்கு எதிரான குற்றங்களுக்காகத் தண்டிக்கப்பட்ட இலங்கை படைத்தரப்பைச் சேர்ந்தவர் மன்னிப்பளித்து விடுவிக்கப்பட்டுள்ளார்.

கொரோனா தொற்று நோயுடன் இலங்கையும் முழு உலகமும் போராடிவருகின்ற இந்த நிலையில் குற்றவாளி ஒருவர் மன்னிப்பளித்து விடுவிக்கப்பட்டுள்ள செயற்பாடானது வெறுக்கத்தக்கது.

இந்நிலையில் இலங்கைப் போர்க்குற்றங்கள், மனித குலத்துக்கு எதிரான குற்றங்கள் தொடர்பில் விசாரணை செய்ய சர்வதேச குற்றவியல் நீதிப் பொறிமுறையை அமைப்பதற்கான நடவடிக்கைகளை எடுக்குமாறு சர்வதேச சமூகத்தை நான் கேட்டுக்கொள்கிறேன்.

இலங்கை அதன் போர்க்குற்றங்களுக்கு பொறுப்புக் கூறியே வேண்டும். இதனை நானும் கனடாவிலும், உலகெங்கிலும் உள்ள ஏனைய சகாக்களும் இணைந்து தொடர்ந்து வலியுறுத்துவோம். – எனவும் கனடா – ஸ்கார்பாரோ – ரூஜ் பார்க் நாடாளுமன்ற உறுப்பினர் ஹரி ஆனந்தசங்கரி விடுத்துள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

## கொரோனா வைரஸ்: சீனாவின்...

(06 ஆம் பக்கத் தொடர்ச்சி)

உலக சுகாதார நிறுவனத்தின் வகிபாகமும், நம்பகத்தன்மையும் கேள்விக்குள்ளாகியிருப்பதாக ஆங்கில செய்தி இணைய தளமான 'தி பிரிண்ட்' இடம் கூறிய சுதேசி ஜாக்ரன் மஞ்ச் அமைப்பின் தேசிய இணை ஒருங்கிணைப்பாளர் அஸ்வினி மகாஜன், கொரோனா வைரஸ் மனிதர்களிடம் இருந்து மனிதர்களுக்குப் பரவும் என்பதற்கு தெளிவான ஆதாரம் கிடைக்கவில்லை என்று ஆரம்பத்தில் கூறிய சீனாவின் கூற்றை உலக சுகாதார நிறுவனம் ஏற்றுக்கொண்டது. ஆனால் இப்போது மனிதர்களிடம் இருந்து மனிதர்களுக்கு இது பரவுகிறது என்பது உறுதியாகிவிட்டது. பிறகு ஏன் உலக சுகாதார நிறுவனம் மன்னிப்பும் கேட்கவில்லை, இந்த வைரஸை 'சீன வைரஸ்' என்றும் ஏன் அழைக்கவில்லை? என்று அவர் கேள்வி எழுப்பினார்.

இந்த வைரஸைப் பரப்புவதில் சீனாவின் 'பெல்ட் அன்ட் ரோட் இனிசியேட்டிவ்' என்ற திட்டத்துக்கு என்ன பங்கு என்பது பற்றி ஓர் உலக அளவிலான விசாரணை நடத்தப்பட வேண்டும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். ஏனென்றால் இந்தத் திட்டத்தில் சீனாவின் பங்காளி நாடுகளான ஈரான் மற்றும் இத்தாலியில் ஏராளமான பேர் கொல்லப்பட்டுள்ளார்கள் என்று அவர் கூறுகிறார்.

அறக்கேடான முறையில் இந்த வைரஸை சீனா பரப்பியதாகவும் இப்போது மொத்த உலகமுமே ஆபத்தில் இருப்பதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

கொரோனா பரவல் விஷயத்தில் உலக சுகாதார நிறுவனம் எதிர்வினை ஆற்றிய முறையை இந்தியாவில் உள்ள பல சுயாதீன கருத்துருவாக்கிகள் விமர்சித்துள்ளனர்.

இந்தப் பிரச்சினையில் உலக சுகாதார நிறுவனம் மோசமான முறையில் எதிர்வினையாற்றியதாக சமீர் சரண் எனும் பிரபல பாதுகாப்பு விவகார விமர்சகர் ஒரு கட்டுரையில் கருத்து தெரிவித்துள்ளார்.

உலக சுகாதார நிறுவனம் போன்ற சர்வதேச அமைப்புகளில் சீனா தன்னுடைய செல்வாக்கை அதிகரித்துக் கொண்டதாகவும் அவர் கூறியுள்ளார். உலக சுகாதார நிறுவனத்தின் மிகையான சீன ஆதரவு போக்கு என்பது உலகம் முழுதும் உள்ள ஜனநாயக நாடுகளுக்கு ஓர் அவசர எச்சரிக்கை சமிக்ஞை என்றும் சரண் தெரிவித்துள்ளார்.

சீனாவுக்கு தொடர்ந்து நன்னடத்தை சான்றிதழ்களை வழங்கி வந்த உலக சுகாதார நிறுவனம் தற்போது உலகம் முழுவதும் மேற்கொள்ளப்பட்டு வரும் தனிமைப்படுத்தல் நடவடிக்கைகளைப் பற்றி குறை கூறி வெந்த புண்ணில் வேல் பாய்ச்சுவதாகப் பிரபல பத்திரிகையாளர் சேகர் குப்தா ஒரு யூடியூப் சேனலில் தெரிவித்துள்ளார்.

### சீன பிரச்சார முயற்சிகள் குறித்து விமர்சனம்

வைரஸ் பரவல் உலகை உலுக்கி வரும் இந்த நிலையில் பொய்களைப் பரப்புவதன் மூலம் இந்த வைரஸ் பிரச்சினை குறித்த பொது உரையாடலைக் கட்டுப்படுத்துவதற்குச் சீனா முயல்வதாக இந்தியாவிலுள்ள பல ஊடக நிறுவனங்களும் விமர்சகர்களும் குற்றம் சாட்டும் நிலை உருவாகியுள்ளது.

ஓபன் என்ற ஆங்கில மொழி பத்திரிக்கையில் ஒரு கட்டுரை எழுதிய பிரபல பாதுகாப்பு விவகார விமர்சகர் பிரம்மா சலானி தனது பிராந்தியத்திலிருந்து பரவிய ஒரு வைரஸை கட்டுப்படுத்துகிற நடவடிக்கையில் தாம் தற்போது உலகத்துக்கே முன் மாதிரியாக இருப்பதாகப் பிரச்சாரம் செய்து சீனா தன்னும் வணிக சின்னத்துக்குப் புதுமுகம் தர சீனா முனைப்புக் காட்டி வருகிறது என்று அவர் கூறியுள்ளார்.

டுவிட்டர் உள்ளிட்ட சமூக ஊடக தளங்களில் பொய் தகவல்களைப் பரப்புவதன் வாயிலாகச் சர்வதேச பொதுஉரையாடலின்மீது செல்வாக்கு செலுத்துவது என்ற உத்தியை சீனா கையாள்வதாகவும் அவர் கூறியுள்ளார்.

கொரோனா பரவல் குறித்த விமர்சனங்களை எதிர்கொள்ளச் சீனா தனது பிரச்சார இயந்திரங்களைப் பயன்படுத்தி வருவதாக WION என்ற ஆங்கில மொழி செய்தி சேனல் ஒரு செய்தியில் குறிப்பிட்டுள்ளது. சீனாவின் பிரச்சார இயந்திரம் என்பது பல்லாயிரக்கணக்கான போலி சமூக ஊடக கணக்குகளை உருவாக்கி உலக அளவில் சீனாவுக்கு ஆதரவான உள்ளடக்கங்களைப் பதிவிடுவதாக இருக்கிறது என்றும் அந்த சேனல் குறிப்பிட்டுள்ளது.

இந்தப் பிரசார உத்தியின் மற்றொரு மற்றொரு பகுதி 2016ஆம் ஆண்டில் தொடங்கப்பட்டது. வெளிநாட்டு பத்திரிகையாளர்களுக்கு 10 மாத பயிற்சி அளிப்பது அந்த திட்டம். இந்தத் திட்டத்தின் கீழ் பல உலக நாடுகளிலிருந்து பத்திரிக்கையாளர் கள் சீனாவிற்குப் பயணம் மேற்கொண்டனர் என்று அந்த சனல் தனது செய்தியில் குறிப்பிட்டுள்ளது.

## பிரதேச சபைகளின் நிவாரணப் பணிக்கு ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இயற்கை அனர்த்தங்கள் ஏற்படுகின்ற போதும், கொள்ளை நோய்கள் பரவுகின்ற போதும் பாதிக்கப்படுகின்ற மக்களுக்கு உள்ளூராட்சி சபைகள் தங்களின் நிலையான நிதி வைப்புகளில் இருந்து பணத்தை எடுத்துத் தமது பிரதேச மக்களின் அவசர, அவசிய தேவைகள் மற்றும் நிவாரணங்களை வழங்கலாம் என 1987ஆம் ஆண்டின் 15ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டம் கூறுகின்றது.

வடக்கில் பல பிரதேச சபைகள் ஒவ்வொன்றும் தமது மக்களின் வரிப்பணம் மூலம் பல கோடி ரூபாக்களை சேமித்து நிலையான வைப்பில் வைத்துள்ளன.

பாதிக்கப்பட்டு அவலப்பட்டு நிற்கும் தமது பிரதேச மக்களுக்கு அவசர, அவசிய நிவாரணங்களை இந்த நிதி மூலம் வழங்க அவை முன்வந்தாலும் –

வடக்கு மாகாண ஆளுநர் தரப்பு அதற்கு முட்டுக்கட்டை போட்டு, அந்த முயற்சியை முடக்கி வருவதாக சம்பந்தப்பட்ட வட்டாரங்கள் விசனம் தெரிவிக்கின்றன.

வடக்கில் தங்கள் கட்சியின் கட்டுப்பாட்டில் இருக்கும் பிரதேச சபைகள் இவ்வாறு மக்களுக்கு உடனடி அவசர நிவாரணப் பணியை முன்னெடுக்கும் என்று இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராசா அறிவித்து ஒரு வாரத்துக்கும் மேலாகிவிட்டது.

இது குறித்து கூட்டமைப்பின் பேச்சாளரும் ஜனாதிபதி சட்டத்தரணியுமான எம்.ஏ.சுமந்திரன் கொழும்பில் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் பகிரங்கமாகத் தெரியப்படுத்தியும் ஒருவாரம் கடந்துள்ளது.

அடுத்தடுத்த நாள்களில் வடக்கு ஆளுநரோடு இந்த விடயம் குறித்து சுமந்திரன் தொலைபேசியில் விரிவாகப் பேசியிருந்தார்.

இது விடயம் குறித்து முடிவெடுப்பதற்குத் தமக்கு ஓரிரு நாள்கள் தேவை என்று குறிப்பிட்ட வடக்கு ஆளுநர் சாள்ஸ், எனினும் ஐந்து நாள்கள் கடந்தும் முடிவு எதையும் வெளிப்படுத்தவில்லை.

மக்களின் அவசர, அவசியப் பணி விடயத்தில் –

அதுவும் உள்ளூராட்சி சபைகள் தமது நிதியில் இருந்து தாமே செலவழிப்பதற்கு அனுமதி தராமல் இப்படி இழுத்தடிக்கின்றமையால் –

இந்த முயற்சிக்கு வடக்கு ஆளுநரின் அனுமதி கிடைக்கவே மாட்டாது என்ற கருத்து நிலைப்பாடு சம்பந்தப்பட்டோர் மத்தியில் ஓங்கியுள்ளது.

இதேசமயம், இது போன்ற நிவாரணத் திட்டம் ஒன்றை மட்டக்களப்பு மாநகர சபை முன்னெடுப்பதற்கு கிழக்கு மாகாண ஆளுநர் அனுமதி அளித்திருக்கின்றார் எனத் தெரிகின்றது.

வடக்கில் மாகாண சபை இயங்காத நிலையில் ஆளுநரின் அனுமதியின்றி துரும்பையும் அசைக்கமுடியாத நிலையில் பிரதேச சபைகள் உள்ளன. ஆனால் அவை போதிய நிதியை வைப்பில் வைத்திருந்தும் தமது மக்களுக்கு இத்தகைய அவசர – அவசிய – காலகட்டத்தில் உதவ முடியாமல் இருக்கின்றமை குறித்து பெரும் விசனம் வெளியிட்டன. (உ)

## யாழ்ப்பாணம் நாக விகாரையில் தொற்று நீக்கும் நடவடிக்கைகள்

யாழ்ப்பாணம், ஏப். 01

நாடளாவிய ரீதியில் பல்வேறு இடங்களிலும் கொரோனாத் தொற்றுநீக்கும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுவரும் நிலையில் யாழ்ப்பாணம் ஆரியகுளம் பகுதியில் அமைந்துள்ள நாகவிகாரை மற்றும் யாத்திரிகர் தங்குமிடம் ஆகியவற்றில் தொற்று நீக்கும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டன.

பொலிஸ் விசேட அதிரடிப்படையினரால் தொற்றுநீக்கும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுவருகின்றமை குறிப்பிடத்தக்கது.

## ஊரடங்குச் சட்டம் தளர்த்தப்பட்ட போதும் மன்னாரில் மக்களின் நடமாட்டம் குறைவு

மன்னார், ஏப். 02

பொலிஸ் ஊரடங்குச் சட்டம் இன்று புதன்கிழமை காலை மன்னார் மாவட்டத்தில் நீக்கப்பட்டபோதும் மக்கள் பொருள்களைக் கொள்வனவு செய்வதில் அதிகளவு ஆர்வம் காட்ட வில்லை.

பொலிஸ் ஊரடங்குச் சட்டம் தளர்த்திக் கொள்ளப்படும்போது வழமை போன்று மன்னாரில் அத்தியாவசியப் பொருட்கள் விற்பனை செய்யும் விற்பனை நிலையங்கள், மரக்கறி விற்பனை நிலையங்கள் திறந்து இருந்தன.

எனினும் மன்னார் பகுதியில் மக்கள் நடமாற்றம் இன்றிக் காணப்பட்டது.

குறைந்த அளவில் மக்களின் நடமாட்டம் காணப்பட்டதோடு, தமக்கு தேவையான பொருள்களைக் கொள்வனவு செய்தனர்.

மன்னார் தினச் சந்தை மரக்கறி வியாபார நிலையப் பகுதி வெறிச்சோடிக் காணப்பட்டது.

அரச தனியார் போக்குவரத்துச் சேவைகள் உள்ளூர் மட்டத்தில் இடம் பெற்றபோதும், அந்தச் சேவைகள் திடீர் என இரத்துச் செய்யப்பட்டன. இதனால் மக்கள் அசௌகரியங்களுக்கு முகம் கொடுத்தனர்.

# ஹற்றனில் 8 பேர் தனிமை

ஹற்றன், ஏப். 02

ஹற்றன் நகரில் வர்த்தக நடவடிக்கையில் ஈடுபட்டு வந்த இரண்டு குடும்பங்களைச் சேர்ந்த எட்டு பேர் நேற்றிரவு முதல் 14 நாள்களுக்கு சுய தனிமைக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர்.

அம்பகமுவ சுகாதார வைத்திய பிரிவின், பொதுச் சுகாதாரப் பரிசோதகர்களாலேயே இந்த நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளது.

கடந்த 29 ஆம் திகதி அத்தியாவசியப் பொருள்களைக் கொள்வனவு செய்வதற்காக ஹற்றனிலுள்ள வர்த்தகரொருவரும், அவரது சாரதியும் நீர்கொழும்பு சென்று வந்துள்ளனர்.

கொரோனா வைரஸ் பரவும் அபாய வலயமாக நீர்கொழும்பு பகுதி அறிவிக்கப்பட்டுள்ளதாலேயே, பாதுகாப்பு கருதி அங்கு சென்றவர்களையும், அவர்களின் குடும்ப உறுப்பினர்களையும் சுய தனிமைக்கு உட்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

ஹற்றன்ஹிஜ்ராபுர பகுதியைச்சேர்ந்த வர்த்தகரினதும் (ஆறு உறுப்பினர்கள்) அவரது சாரதியினதும் (இருவர்) குடும்பங்களே இவ்வாறு தனிமைக்குட்படுத்தப்பட்டுள்ளன.



சாரதி கொழும்பு சென்றதால் அவரின் இரு பிள்ளைகளும் சகோதரர் ஒருவரின் வீட்டுக்குச் சென்றுள்ளனர். அவர்கள் இன்னும் வீடு திரும்பவில்லை. எனவே, இரு தரப்புகளில் இருந்தும் மொத்தமாக 8 பேர் சுய தனிமைக்குட்படுத்தப்பட்டுள்ளனர்.

### மற்றைய பாடசாலைகளுக்கு முன்மாதிரியாக

## ஊரடங்கால் அவதியுறும் மாணவர்களின் குடும்பங்களுக்கு அவசிய உதவிகளை வழங்க யாழ். இந்துக்கல்லூரி ஏற்பாடு!

கொரோனா வைரஸ் தொற்றுக் காரணமாக நாட்டில் ஏற்பட்டுள்ள அசாதாரண சூழ்நிலைகளினால் பாதிப்படைந்துள்ள தன்னுடைய மாணவர்களின் குடும்பங்களுக்குத் தேவையான அவசர உதவிகளை வழங்குவதற்கு யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி நிர்வாகம் முன்வந்துள்ளது.

இதற்கான அழைப்பை, யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியின் அதிபர் ரட்ணம் செந்தில்மாறன் விடுத்துள்ளார்.

பொருளாதார ரீதியாகப் பாதிக்கப்பட்டுள்ள மாணவர்களின் குடும்பங்களுக்கான மனிதாபிமான உதவியை மேற்கொள்வதற்கு பாடசாலையின் உள்ளக சமூகம் முன்வந்துள்ளது என்றும், உதவி தேவைப்படும் மாணவர்கள் அல்லது அத்தகையவர்களின் விபரம் தெரிந்த சக மாணவர்கள் அதிபருடன் நேரடியாகவோ அல்லது வகுப்பாசிரியர்கள், பகுதித் தலைவர்கள் ஊடாகவோ தொடர்பு கொள்ளுமாறும் அவர் கோரிக்கை விடுத்துள்ளார்.

# மக்களுக்கு உலருணவு







யாழ்ப்பாணம், ஏப். 02

சங்கானை மக்கள் ஒன்றியம் கனடா வாழ் மக்கள் ஒன்றியத்தின் நிதிப் பங்களிப்போடு இரண்டாம் கட்டமாக நேற்று ரூபா ஒரு லட்சம் பெறுமதியான உலர் உணவுப் பொருட்கள் மக்கள் ஒன்றியத்தினால் வழங்கப்பட்டன.

ஜே/178, ஜே/179, ஜே/180, ஜே/181 கிராமசேவகர் பிரிவுகளில் வசிக்கின்ற வருமானம் குறைந்த பெண் தலைமைத்துவக் குடும்பங்கள், மாற்றுத்திறனாளிகள் குடும்பங்களைச் சேர்ந்த 73 குடும்பங்களுக்கு பிரதேச செயலகத்தின் அனுமதியுடன் வீடு வீடாக சென்று இந்தப் பொருள்கள் வழங்கப்பட்டன.





காலைக்கதிர் Kalaikkathir

மழைக் காலம்




தினம் ஒரு தலைப்பு

சித்திரப்போட்டி

நாளைய (02/04/2020) தலைப்பு
மழைக் காலம்

ஒவ்வொரு நாளுக்குரிய தலைப்பும் முதல் நாள் மாலையில் தரப்படும். அத்தலைப்புக்குப் பொருத்தமான சித்திரத்தை அன்று மாலை 6 மணிக்கு முன்னதாக எமது மின்னஞ்சலுக்கு அனுப்பி வைக்க வேண்டும்.

* சித்திரத்தினை A4 அளவுள்ள வெள்ளைத்தாளில் வரைய வேண்டும்.
* சித்திரங்கள் வர்ணத்தில் அல்லது கருப்பு வெள்ளையாக அமையலாம்.
* தெரிவுசெய்யப்படும் சித்திரங்கள் காலைக்கதிரின் முகப் புத்தகத்தில் பகிரப்படும்.
* தினமும் தெரிவுசெய்யப்படும் தரமான ஒரு சித்திரம் காலைக்கதிர் பத்திரிகையில் பிரசுரமாகும்.
* போட்டி முடிவில் பரிசுக்குரிய சித்திரங்களுக்கு பணப் பரிசில்கள் வழங்கப்படும்.

சித்திரங்கள் தெளிவான முறையில் படம்பிடிக்கப்பட்டு வரைந்த மாணவரின் பெயர், பாடசாலை, தரம், பெற்றோரின் தொலைபேசி இலக்கம் ஆகிய விபரங்களுடன் kalaikkathiredu@gmail.com எனும் மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பிவைக்கவும்.

மேலதிக விபரங்களுக்கு: 076 443 8623

## யாழ். பெண் கொலையுடன் தொடர்புடையவர் கைது!

றொறன்ரோ, ஏப். 02

கனடாவில் யாழ்ப்பாணப் பெண் சுட்டுக்கொல்லப்பட்ட சம்பவத்துடன் தொடர்புடையவர் என்ற குற்றச்சாட்டில் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார். றொறன்ரோவைச் சேர்ந்த 28 வயதான ஸ்ரேட்லி கீர் என்பவரே நேற்று முன் தினம் கைது செய்யப்பட்டார் எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கடந்த 13ஆம் திகதி ஸ்காபரோவில் 38 வயதான தீபா சீவரத்னம், அவரது இல்லத்தில் வைத்துச் சுட்டுக் கொல்லப்பட்டார். இந்த சம்பவத்தின்போது தீபாவின் தாயார் பாரிய காயங்களுக்கு உள்ளான நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார்.

இந்தக் குற்றச்சாட்டுடன் தொடர்புடையவர் என்ற சந்தேகத்தில் நபர் ஒருவர் நேற்றுக் கைது செய்யப்பட்டுள்ளார்.

சந்தேக நபரை எதிர்வரும் 9ஆம் திகதி நீதிமன்றில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளதாகப் பொலிஸார் தெரிவித்துள்ளார்.

கொலை செய்யப்பட்ட தீபா சீவரட்னம் யாழ்ப்பாணம், வடமராட்சி கொற்றாவத்தை பகுதியைச் சேர்ந்தவராவார்.

## மேலும் ஒருவர் குணமடைவு

கொழும்பு, ஏப். 02

கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளான மேலும் ஒருவர் குணமடைந்து இன்று புதன்கிழமை வைத்தியசாலையில் இருந்து வெளியேறியுள்ளார்.

இதுவரை 18 பேர் பூரண குணமடைந்துள்ளனர் எனச் சுகாதார அமைச்சின் அண்மைய அறிக்கைகள் தெரிவிக்கின்றன.

மேலும் கொரோனா வைரஸ் தாக்கம் ஏற்பட்டிருக்கலாம் என்ற சந்தேகத்தில் 231 பேர் தொடர்ந்தும் சிகிச்சைபெற்று வருகின்றனர் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

# கொரோனாவை வைத்து அரசியல் செய்யாதீர்கள்

## தேர்தல் ஆணையாளர் கோரிக்கை



கொழும்பு, ஏப். 02

கொரோனாவை வைத்து எவரும் அரசியல் செய்ய முயற்சிக்க வேண்டாம் எனத் தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் மஹிந்த தேசப்பிரிய எச்சரிக்கை விடுத்துள்ளார்.

ஊடகம் ஒன்றுக்கு வழங்கியுள்ள விசேட செவ்வியின்போதே அவர் இவ்வாறு எச்சரிக்கை விடுத்துள்ளார்.

இதன்போது கருத்து வெளியிட்டுள்ள அவர், நாட்டில் கொரோனா தொற்று நோய் பரவல் மக்களை அதிகம் நெருக்கடிக்குள் தள்ளியுள்ளதன் காரணமாக மக்களின் பாதுகாப்பைக் கருத்தில் கொண்டே நாம் பொதுத் தேர்தலைக்கூட பிற்போட நேர்ந்தது.

அவ்வாறு இருக்கையில் இந்த கால கட்டத்தில் தேர்தல் சட்டத்தை மீறும் விதத்தில் அரசியல் கட்சிகள் செயற்படுவதாக எமக்கு முறைப்பாடுகள் கிடைத்துள்ளன.

இது எந்தளவு மோசமான தூரம் சென்றுள்ளது என்றால் மக்களுக்கு அரசு கொடுக்கும் சமுர்த்திக் கொடுப்பனவுகளில் கூட அரசியல் இலாபம் பெறப்படும் விதத்தில் தேர்தல் பிரசாரங்களை முன்னெடுக்கும் வகையில் இவர்கள் செயற்படுகின்றனர்.

அரச அதிகாரிகள் மூலமாகப் பொது மக்களுக்குச் சமுர்த்தி நிதி பங்கிடப்படுகின்ற நேரங்களில் அவர்களுடன் இணைந்து அரசியல் பிரதிநிதிகள் தமது கட்சியையும் சின்னத்தையும் பிரசித்தப்படுத்தும் செயற்பாடுகள் இடம்பெறுவதாக முறைப்பாடுகள் கிடைத்துள்ளன.

இது கீழ்மட்ட அரசியல்வாதிகள் மட்டுமல்லாது உயரிய மட்டத்தில் உள்ள அரசியல்வாதிகள் கூட இந்தச் செயற்பாடுகளில் ஈடுபட்டுள்ளனர். இது மிகவும் வேதனைக்குரிய விடயமாக மாறியுள்ளது.

இது குறித்து நாம் மிகவும் அதிருப்தியில் உள்ளோம். அதிருப்தியடைவது மட்டுமல்ல இந்தச் செயற்பாடுகளை நாம் வன்மையாகக் கண்டிக்கின்றோம். இவ்வாறான செயற்பாடுகள் இடம்பெறக் கூடாது.

இந்தக் கால எல்லைக்குள் அரசியல் பக்கச்சார்புகளைக் கைவிட்டு பொதுவான வேலைத்திட்டம் ஏதேனும் இருப்பின் அதனைக் கையாள வேண்டும் எனவும் நாம் ஏற்கனவே சகல தரப்பையும் அறிவுறுத்தியுள்ளோம்.

அதுமட்டும் அல்லாது நகரசபைகளில், மாகாண சபைகளில் மக்களுக்கு அத்தியாவசியப் பொருட்களை வழங்கும் செயற்பாடுகளில் கூட முழுமையாக அரசியல் தலையீடுகள் உள்ளன.

இவ்வாறு மக்களின் இக்கட்டான சூழ்நிலையிலும் அரசியல் செய்ய முயற்சிப்பதன் மூலமாக எமது நாடு எந்த திசையில் பயணிக்கின்றது என்பதை உணர முடிகின்றது.

நாம் மதம், இனம் மறந்து அனைவரும் ஒன்றிணைந்து நாடாக இயங்கிக்கொண்டுள்ள இந்த நேரத்தில் அரசியல்வாதிகள் ஏன் இவ்வாறு மோசமாகவும் கீழ்த்தரமாகவும் செயற்படுகின்றனர் என்பது கேள்விக்குறியாக மாறியுள்ளது.

இந்த தேசிய அனர்த்த சூழலில் அதனை அரசியலாக பயன்படுத்திக் கொள்ள வேண்டாம் என சகல தரப்பினரிடமும் கேட்டுக்கொள்கிறேன் – என்றார்.

## கொழும்பில் ஆரம்பமானது விசேட சோதனை ஏற்பாடு

கொழும்பு, ஏப். 02

பொலிஸ் விசேட அதிரடிப்படையினரால் கொழும்பில் 16 வீதித்தடைகள் அமைக்கப்பட்டுள்ளன.

பிரதிப் பொலிஸ்மா அதிபர் அஜித் ரோகண இந்த விடயத்தைக் குறிப்பிட்டார்.

விசேட பாதுகாப்பு நடவடிக்கைகள் கொழும்பு நகரில் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

இதற்கமையவே பொலிஸ் விசேட அதிரடிப்படையினர் ஊடாக கொழும்பு நகரில் 16 வீதித் தடைகள் அமைக்கப்பட்டுள்ளன.

கொழும்பு நகருக்கு உட்பிரவேசிக்கும் பகுதிகளில் இந்த வீதித் தடைகள் அமைக்கப்பட்டுள்ளதாக பிரதிப் பொலிஸ்மா அதிபர் அஜித் ரோகண கூறினார்.

கொழும்பு நகருக்குள் பிரவேசிக்கும் அனைத்து வாகனங்களுக்குமான பொலிஸ் ஊரடங்கு அனுமதிப் பத்திரம் மற்றும் வாகன அனுமதிப் பத்திரம் என்பன அந்த இடங்களில் நிச்சயமாகக் கண்காணிக்கப்படும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை, நாடளாவிய ரீதியில் கடந்த 20 ஆம் திகதி மாலை 06 மணிக்கு அமுல்படுத்தப்பட்ட ஊரடங்குச் சட்டம் கொழும்பு, கம்பஹா, களுத்துறை, புத்தளம், கண்டி மற்றும் யாழ்ப்பாணம் மாவட்டங்களுக்கு கடந்த 24 அன்று ட்டுமே தளர்த்தப்பட்டது.

அதன் பின்னர் குறித்த பகுதிகளில் மறு அறிவித்தல் வரும் வரை ஊரடங்கு சட்டம் அமுல்படுத்தப்பட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

## ஓய்வூதியர்களுக்கு சலுகை!

கொழும்பு, ஏப். 02

ஏப்ரல் மாத ஓய்வூதியப் பணத்தைப் பெற்றுக்கொள்ளும் ஓய்வூதியர்களுக்கு விசேட வாகன ஒழுங்குகள் செய்து கொடுக்கப்படவுள்ளன.

நாளை மற்றும் நாளை மறுதினம் இந்தப் போக்குவரத்துச் சேவையை வழங்குவதற்குரிய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக இராணுவம் அறிவித்துள்ளது.

ஓய்வூதியம் பெறுபவர்களின் நலன் கருதி இந்த நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.










## திருநெல்வேலிப் பகுதியில் இன்று கிருமி நீக்கும் பணி

யாழ்ப்பாணம், ஏப். 02

திருநெல்வேலிப் பகுதியில் கிருமி நீக்கும் மருந்து விசுறும் பணிகள் இன்று புதன்கிழமை காலை முன்னெடுக்கப்பட்டன.

குறித்த பகுதியில் உள்ள சந்தை, வியாபார நிலையங்கள் உள்ளிட்ட பகுதிகளிலேயே இந்தப் பணிகள் முன்னெடுக்கப்பட்டன.

கொரோனா தாக்கத்தால் நாட்டில் எழுந்துள்ள அசாதார சூழ்நிலையைக் கருத்தில் கொண்டு நாடு முழுவதும் கிருமித் தொற்று நீக்கும் நடவடிக்கை மேற்கொள் ளப்பட்டு வருகின்றது.

இதன்படி கொழும்பில் இருந்து யாழ். மாவட்டத்துக்கு வரவழைக்கப்பட்ட விசேட பொலிஸ் குழுவினர் குடாநாடு முழுவதும் இந்த நடவடிக்கைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

இன்று புதன்கிழமை காலை திருநெல்வேலியில் முன்னெடுக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## மாத்தளை மெல்கொல்ல காட்டில் தீ!

மாத்தளை, ஏப்.01

மாத்தளை நாவுல பிரதேச செயலாளர் பிரிவுக்கு உட்பட்ட மெல்கொல்ல காட்டில், நேற்று முன்தினம் ஏற்பட்ட காட்டுத் தீயைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவருவதற்கு சுமார் மூன்று மணித்தியாலங்கு மேல் சென்றதாக, நாவுல வனவிலங்குத் திணைக்கள அதிகாரிகள் தெரிவித்தனர்.

மெல்கொல்லவிலிருந்து குமாரவல வரை, காட்டுப் பகுதியாகக் காணப்படுவதாகவும் இந்த வனத்துக்கு, விமிகள் தீ வைத்திருக்கலாம் என வும் அதிகாரிகள் சந்தேகம் தெரிவிக்கின்றனர்.

இப்பகுதியில் நிலவுகின்ற , அதிகக் காற்று காரணமாக, தீயைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வருவதற்குப் பாரிய சிரமங்களை எதிர்கொண்டனர் எனவும் அதிகாரிகள் தெரிவித்தனர்.

மேற்படி காட்டுக்குத் தீ வைத்தவர் தொடர்பிலான தகவல்களைப் பெற்றுக்கொண்டுள்ளதாகவும் அவரைக் கைதுசெய்வதற்கான நடவடிக்கையில் ஈடுபட்டு வருவதாகவும் அதிகாரிகள் மேலும் தெரிவித்தனர்.

## அரச ஊழியர்களின் கடமைகளுக்கு இடையூறு செய்தால் நடவடிக்கை!

*கொழும்பு, ஏப்.01*

*அரச ஊழியர்களின் கடமைகளுக்குஇடையூறு விளைவிப்போருக்கு எதிராகக் கடும் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என, பொலிஸ் தலைமையகம் தெரிவித்துள்ளது.*

*கொரோனா வைரஸ் நாட்டில் பரவுவதைத் தடுக்கும் நோக்கில் அரச துறையினர் பாரிய அர்ப்பணிப்புடன்சேவைகளை ஆற்றி வருகின்றனர்.*

*இந்நிலையில் அவர்களின் கடமைகள் குறித்து குறைகூறி இடையூறு விளைவித்தல், அச்சுறுத்தல் விடுத்தல், தவறான செய்திகளை சமூக வலைத்தளங்களில் பதிவேற்றுதல் ஆகிய செயற்பாடுகள் குறித்து தகவல் கிடைத்துள்ளதாக, பொலிஸ் தலைமையகம் தெரிவித்துள்ளது.*

*இவ்வாறான செயற்பாடுகளில் ஈடுபடுவோருக்கு எதிராக கடும் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்பதுடன், அவர்களை கைதுசெய்து நீதிமன்றில் ஆஜர்படுத்தமாறு, சகல பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரிகளுக்கும் பதில் பொலிஸ்மா அதிபர் உத்தரவிட்டுள்ளார்.*

## சமூர்த்தி முதல் கட்டக் கொடுப்பனவு 10ஆம் திகதிக்கு முன் பூர்த்தியாம்

கொரோனா தொற்றுப் பரவலை தடுக்கும் ஊரடங்கு உத்தரவால் நெருக்கடியை எதிர்கொள்ளுகின்ற சமூர்த்தி பயனாளிகளுக்கு நிவாரணம் தரும் நோக்கில் அரசாங்கத்தால் வழங்க உத்தேசிக்கப்பட்டுள்ள 10,000 ரூபா முன்கூட்டிய கொடுப்பனவு தொகையை எதிர் வரும் 10 ஆம் திகதிக்கு முன்னர் வழங்கி முடிக்கவுள்ளதாக சமூர்த்தி அபிவிருத்தி திணைக்களம் தெரிவித்துள்ளது.

அந்தத் திணைக்களத்தின் பணிப்பாளர் பந்துல திலகசிறி இதனை தெரிவித்துள்ளார்.

இந்தமுன்கூட்டியகொடுப்பனவுத்தொகையை இரண்டு கட்டங்களாக வழங்க நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

அதற்கமைய முதற்கட்டமாக 5000 ரூபா கொடுப்பனவை பெற்றுக்கொடுக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளன எனவும் அவர் குறிப்பிட்டார்.

சுமார் 20 இலட்சத்திற்கும் அதிகமான சமூர்த்தி பயனாளிகள் இதன்மூலம் நன்மை பெறவுள்ளனர். இதற்காக 2 ஆயிரம் கோடி ரூபா ஒதுக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

இந்தத் தொகைக்காக எந்தவித வட்டியும் அறவிடப்படமாட்டாது எனவும் பணத்தை மீள் செலுத்துவதற்கான காலம் 18 மாதங்கள் எனவும் சமூர்த்தி அபிவிருத்தித் திணைக்களம் தெரிவித்துள்ளது.

## நோயாளரிடமிருந்து தொற்றைத் தவிர்க்க இனி காணொலி மூலம் வைத்திய சிகிச்சை

### லேடி றிச்வே ஆஸ்பத்திரியில் பரீட்சார்த்தம்

வேறு நோய்களுக்கு என்ற பெயரில் சிகிச்சைக்கு வரும் நோயாளிகளில் கொரோனாத் தொற்று நோயாளரும் வந்து விடுவதால் முழு வைத்தியசாலையுமே பாதிப்புறும் ஆபத்து இருப்பதால் அதை தவிர்க்கும் நோக்கில் புதிய வழிமுற்சி ஒன்று ஆராயப்படுகின்றது.

நோயாளர்களை டாக்டர்கள் நேரடியாக நெருங்கி நின்று வைத்தியம் செய்யாமல் தவிர்க்கும் முறைமையே அது.

காணொலி தொழில் நுட்பத்தை பயன்படுத்தி வைத்தியசாலைகளில் (கிளினிக்) மருத்துவ சேவையை ஆரம்பிப்பதற்கான உத்தேசத்திட்டம் கொழும்பு ரிச்வே சிறுவர் வைத்திய சாலையில் நேற்று முன்தினம் (31 ஆம் திகதி ஆரம்பமானது.

இதன் போது முதல்கட்டமாக சிறுவர்களுக்கான நரம்பியல் நோய் நிபுணர் அனுருத்த பாதெனிய கையடக்க தொலைபேசியில் காணொலி தொடர்பு மூலம் சிறுவர் ஒருவருக்கு சிகிச்சையளித்துள்ளார்.

இதன் மூலம் தற்போதைய கொரோனா நோய் தொற்றின் காரணமாக வைத்தியசாலைகளுக்கு வெளிநோயாளர் பிரிவிற்கு வருகை தருவதில் சிரமங்களை எதிர்கொள்ளும் நோயாளர்கள் வீட்டிலிருந்தவாறே தங்களுக்குரிய சிகிச்சைகளை பெற்றுக்கொள்ளக் கூடியவகையில் இந்த வேலைத்திட்டம் விரிவுபடுத்தப்படவுள்ளது. இதற்காக விசேட நடமாடும் வேலைத்திட்டம் சுகாதார அமைச்சர் பவித்ரா வன்னியாராச்சியின் ஆலோசனைக்கு அமைய சுகாதார அமைச்சு முன்னெடுத்துள்ளது.



0770773333 என்ற கையடக்க தொலைபேசி இலக்கத்தின் ஊடாகவும் oDoc app கையடக் தொலைபேசியில் பதிவிறக்கம் செய்வதன் மூலமும் இதுதொடர்பான தகவல்களைப் பெற்றுக்கொள்ள முடியும்.

## புத்தளம் தனிமைப்படுத்தல் மையத்திலேயே 10 நோயாளிகள் அடையாளம் காணப்பட்டனர்

*கொழும்பு, ஏப். 02*

*புத்தளத்தில்நேற்றுஅடையாளம்காணப்பட்ட 10 கொரொனா நோயாளர்கள், அங்கு அமைக்கப்பட்டுள்ள தனிமைப்படுத்தல் மையத்தில் தங்க வைக்கப்பட்டிருந்தவர்கள் என இராணுவத்தினர் தெரிவித்துள்ளனர்.*

*மலேசியா, இந்தோனேசியாவுக்குச் சென்று வந்த ஒருவர் கொரொனா தொற்றினால் பாதிக்கப்பட்டிருந்தமை தெரிய வந்தது. இதையடுத்து புலனாய்வுப் பிரிவினர் நடத்திய விசாரணையில், மேலும் சிலர் இந்த நாடுகளில் நடந்த மத வழிபாடுகளுக்குச் சென்று வந்தமை தெரிய வந்தது.*

*இதையடுத்து, புத்தளத்தில் ஒரு கிராமமே தனிமைப்படுத்தப்பட்டு, 29ஆம் திகதி புத்தளம் சாஹிரா கல்லூரியில் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.*

*அவர்களிடம் மேற்கொள்ளப்பட்ட பரிசோதனையிலேயே 10 பேர் தொற்றுக்கு இலக்காகியமை தெரிய வந்தது.*

*8 ஆண்களும், 2 பெண்களுமே தொற்றுக்கு இலக்காகியுள்ளனர். அவர்கள் நேற்றிரவு ஐ.டி.எச் வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டனர். (ஐ)*

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள பசுமை ஊடக இல்லம் (தனி) வரை. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 01.04.2020 இல் வெளியிடப்பெற்றது.